பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

திறனி

பல், மூக்குக் கண்ணாடியகம்

- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.
பிரதான வீதி, பருத்தித்துறை
540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 14 (03.06.2004) வியாழக்கிழமை இதழ்:245

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்; பரிந்துரைகள் அரசிடம் கையளிப்பு

விரைவில் கைச்சாத்திடத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான தமது பரிந்துரைகளை இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது.

இது தொடர்பான தமது பரிந்துரைகளை ஏற்கனவே இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் சமர்ப்பித்திருந்தது.

இந்த நிலையில் இரண்டு நாட்டு அரசாங்கங்களும் விரைவில் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன.

இதன்போது உத்தேச ஒப்பந்தத்தில் செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்து கலந்துரையாடப்படுமென பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னரே பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்து கொள்ளும் திகதி தீர்மானிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்சமயம் இந்திய விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப்முகர்ஜியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதேநேரம் இந்தியாவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங்கும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்ற தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஊடகத்துறை அமைச்சராக மங்கள சமரவீர நியமனம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா தனக்கு மிகவும் நெருக்கமான நம்பிக்கைக் குரியவரான மங்கள சமரவீரவை விரைவில் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியான செய்திகள் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -

மேல்மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஊடகத்துறை அமைச்சர் றெஜினோல்ட் குரே தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இதனால் ஊடகத்துறை அமைச்சராக டி.யூ.குணசேகர நியமிக்கப்படுவார் என முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் ஆளும் ஐக்கிய மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஊடகவியலாளர் நடேசனின் இறுதிச் சடங்கு இன்று காலை

யாழ்.குடாநாட்டுக்கு நேற்று எடுத்துவரப்பட்டு, பல்வேறு இடங்களிலும் மக்கள் வணக்கத்துக்கு வைக்கப்பட்ட ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐ.நடேசனின் பூதவுடல் இன்று காலை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இடம் பெறும் இறுதி நினைவஞ்சலிக் கூட்டத்தின் பின்னர் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசனின் பூதவுடல்,

தமிழர் தாயகப் பகுதியெங்கும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

சிரேஷ்ட ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் அமைப்புகள், பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு அமைய இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை.

இதனால் நகரங்கள், கிராமங்

இயல்புநிலை சீர்குலைந்தது

யாழ்குடாநாட்டுக்கு நேற்று எடுத்துவரப் பட்டு, பல்வேறு இடங் களிலும் மக்கள் வணக் கத்துக்கு வைக்கப் பட்ட ஊடகவியலாள ரும், நாட்டுப்பற்றாள ருமான ஜ.நடேசனின் பூதவுடல் இன்று காலை நெல்லியடி மகாவித்தி யாலயத்தில் இடம் பெறும் இறுதி நினை வஞ்சலிக் கூட்டத்தின் பின்னர் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசனின் பூதவுடல், நேற்றுக் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பு செயலகத்தில் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

இங்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நாட்டுப்பற்றாளர் நடேசனின் (12 ஆம் பக்கம் பார்க்க)

சிரேஷ்ட ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசன் படுகொலை செய்யப்பட்ட தைக் கண்டித்து நேற்று தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் அமைப்புகள், பொது அமைப்புக்களின் வேண்டு கோளுக்கு அமைய இந்த ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் நேற்று வர்த் தக நிலையங்கள் மூடப்பட்டிருந்த துடன் போக்குவரத்துச் சேவைக ளும் இடம்பெறவில்லை.

இதனால் நகரங்கள், கிராமங் கள் யாவும் வெறிச்சோடிக் கிடந் தன. வீதியெங்கும் கறுப்புக்கொடி கள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஆங் காங்கே ஒலிபெருக்கிகளில் சோக

இயல்புநிலை சீர்குலைந்தது

கீதம் இசைக்கவிடப்பட்டுக்கொண்டி ருந்தன.

கிளிநொச்சி மற்றும் வவுனியா பகுதிகளில் நேற்று பூரண துக்க தினமும் ஹர்த்தாலும் அனுஷ்டிக் கப்பட்டது.

இதேவேளை நாட்டுப்பற்றாளர் நடேசனின் படுகொலையைக் கண் டித்து நேற்று மட்டக்களப்பு, அம் பாறை மாவட்டங்களில் துக்க தினமும், ஹர்த்தாலும் அனுஷ்டிக் கப்பட்டது.

இதனால் போக்குவரத்துகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

இயல்பு நிலையை உருவாக்குவது குறித்து மட்டு. நகரில் புலிகள் – படையினர் பேச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் வன் முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தி இயல்பு நிலையைக் கொண்டுவருவது தொடர்பாக மட்டக்களப் பில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தரப்புக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் ஆராயப்பட்டது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் சூனியப் பிர தேசமான வவுணதீவு செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சுமார் இரண்டு மணிநேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ், தளபதிகளான ராம், ரமணன், ஜெயார்த்தன், மட்டு அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பவானந்தன் ஆகியோரும் இராணுவத்தரப்பில் கிழக்குப் பிராந்திய தளபதியும் இராணுவத்தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தலைமையிலான அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பின் போது -

மட்டக்களப்பில் வன்முறைகளைக் கட்டுப்படுத்தி இயல்பு நிலைமையைக் கொண்டுவருவதற்கு எடுக் கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

திருவிழாவிற்குச் சென்ற சிறுவன் தீர்த்தக் கேணியில் சடலமாக மீட்பு!

(நெல்லியடி)

துன்னாலை நுணுவில் பிள்ளையார் கோவில் தீர்த்தத் திருவிழா விற்குச் சென்ற 5 வயதுச் சிறுவன் ஆலய தீர்த்தக் கேணியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டான்.

நேற்றுக்காலை நடைபெற்ற இந்த சம்பவத்தில் நெல்லியடி கிழக்கு சாம்பியன் வீதி, அரசடியைச் சேர்ந்த பிரதீபன் திலக்சன் (வயது 5) என்ற சிறுவனே தீர்த்தக் கேணியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

ஆலயத் தீர்த்த உற்சவத்திற்கு பெற்றோருடன் சென்ற சிறுவன் ஆட்டோவில் உறக்கத்தில் இருந்தவேளை தனிமையாக விட்டுவிட்டு பூசை பார்ப்பதற்குச் சென்ற பெற்றோர் திரும்பி வந்து பார்த்தபோது ஆட்டோவில் சிறுவனை காணவில்லை. நீண்ட நேரமாக தேடியும் பலன் கிட்டாத நிலையில் தகவல் ஒன்றையடுத்து ஆலய கேணியிலிருந்து சிறுவனின் சடலத்தைக கண்டெடுத்தனர்.

நெல்லியடிப் பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்திய சாலையில் பிரே தப் பரிசோதனை முடிந்த பின்னர் பெற்றோரிடம் கையளித்தனர். (12)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com. (சி/2489)

EXPOAIR
Your friend in the skies...

நாட்டுப்பற்றாளர் நடேசனின் இறுதிப்பவனி

காவல்துறையின் பாதுகாப்புடன் முகமாலைக்கு

முகமாலையில் அணிவகுப்பு மரியாதை

பூதவுடலுக்கு அஞ்சலி

போராளிகள் நடேசனுக்கு மரியாதை செலுத்துதல்

பொதுமக்கள் மரியாதை செலுத்துதல்

நேற்றைய ஹர்த்தாலில் சாவகச்சேரி நகரம்

பூதவுடலுக்கு சந்திரசேகரன் அஞ்சலி செலுத்துகிறார்

உறவினர்களுக்கு ஆறுதல் கூறும் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் மாணவர்கள் அஞ்சலி

கிளிநொச்சியில் மாணவர்கள் அணிவகுப்பு

நீர்வேலி விபத்தில் இருவர் காயம்!

நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்ற ஆட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் நீர்வேலிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது இதேயிடத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சுரேஸ்குமார், 55 வயதுடைய கந்தசாமி ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நீர்வேலிச் சந்திக்கு அண்மையில் ஆட்டோவும், மோட்டார் சைக்கிளும் எதிரே மோதிக்கொண்டதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை யாழ்.அரசடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

சிறு விளம்பரம்

மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது மருத்துவருக்கு, மருத்துவ மணமகள் தேவை மணமகனின் தாய், அக்கா, அக்கா கணவர் வைத்தியர்கள். தொடர்பு:- நல்லூர் முருகன் திருமண சேவை நல்லூர் மணியம் 82/2/1 ஆட்டுப்பட்டித் தெரு கொழும்பு - 13 T.P. 2381299, 2360733, Fax. 4610815 *(748)*

நிறைஞ்சனஸ் சங்கானை
இன்றுமுதல்
சீமபு, திரிஷா, ரகுவரன், விவேக் நடித்த
அலை
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆயுத எழுத்து
காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சதா, விவேக நடித்த
எதிரி
அடுத்த வெளியீடு
நாளைமுதல்
விஜயின் கில்லி
(தீபாவளி)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

யாழ்ப்பாணத்தில் புதியதொரு முயற்சி!!
A/L முடித்துவிட்டு இருக்கும் மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்.....
குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் வளம்பெற...!
நேரடி ஒலிபரப்பாளர் பயிற்சிநெறி!
ஊடகவியலாளர் பயிற்சிநெறி!
என்றும் புதுமையை வழங்கும் ஜோ.எகட்டன் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பயிற்சி நெறி!
◎ கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
◎ மிகப் பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள் பயிற்சிகளை வழங்குவார்கள்.
ஆரம்பம் ஜூன் நடுப்பகுதி
பயிற்சிக்கான முழுக்கட்டணம் ரூபா 5000/- மட்டும்
பதிவுக்கட்டணம் ரூபா 1000/=
பயிற்சிக்காலம் 6 மாதங்கள்
▼ தமிழ்மொழியில் திறமைச்சித்தி, ஆங்கிலத்தில் சாதாரண சித்தியுடன் க.பொ.த.சாதாரணதரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
▼ எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்
பதிவுக்கட்டணம் ரூபா 1000/= இற்கான காசுக்கட்டளையை 'Zenith Marketing and Advertising Systems' என்ற பெயரில் சுண்டுக்குளி தபாலகத்தில் மாற்றக்கூடியதாக விண்ணப்பத்துடன் அனுப்பவும்.
அனுப்ப வேண்டிய முகவரி: செனித் மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு: தொ.பே.இல: 222 - 7227
◎ அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
குறிப்பு: தலைமையகத்தில் இருந்து வந்த இறுதியான அறிவித்தல்படி ஆங்கில கல்வி நீக்கப்பட்டுள்ளது.
(சி-2635)

இன்னும் 2 நாட்களே உள்ளன!
Mega
கொம்பியூட்டர் உயர் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
5-6-2004
ASIAN COMPUTERS
• 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
• Prasanna Computers - K.K.S.வீதி,சுண்ணாகம்.
• கொடிகாமம் ரோட், நெல்லியடி.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம்

லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் புலிகள் ஆர்வமாக உள்ளனர். சமாதானப் பேச்சுவார்த்தைக்கான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த அனைத்து விடயங்களும் பேச்சுவார்த்தை மேசையில் ஆராயப்படும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள அவர், கடந்த திங்கட்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் புனரமைப்பு, புனர்வாழ்வு மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதன் மூலம், சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா பேராதரவு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளித்த இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்.

இலங்கையில் தனித் தமிழீழம் அமைக்க இந்தியா சம்மதம் தெரிவிக்காது. எனினும், இலங்கையின் ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்கின்ற **மத்திய** அரசின் நிலையில் மாற்றம் இல்லை.

இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களின் சட்டபூர்வமான உணர்வுகளை, விருப்பங்களைக் கருத்திற்கொண்டு பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கு இந்தியா விரும்புகிறது. எனவே; பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பக்கோரும் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்க நாங்கள் விரும்பவில்லை. இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு பகுதி மக்களின் சோகம் முடிவுக்கு வரவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா விதித்துள்ள தடை தொடர்ந்து அமுலில் உள்ளது. இந்தத் தடை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் மருத்துவமனைகள் கட்டவும் வீதிகள் அமைக்கவும் இந்தியா விடம் இலங்கை மனிதாபிமான உதவிகளைக் கேட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

நடேசன் படுகொலை! விசாரணை நடத்துகிறோம்

கண்காணிப்புக்குழு கூறுகிறது

(கொழும்பு)

பத்திரிகையாளர் நடேசன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் துணைத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

இதுதொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில், இவ்வாறான சம்பவங்கள் அனைத்தும் சமதானத்திற்கு இடையூறானது. கிழக்கு பகுதி நிலவரங்கள் குறித்து சந்திப்பொன்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பின் பின்னர்தான் நாம் மேலும் கருத்துத் தெரிவிக்கமுடியும்.

இலங்கையின் கிழக்கே திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் 20 போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் இருக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். விரிவான புலனாய்வு மேற்கொள்ளும் சக்தி, தகுதி எம்மிடம் இல்லை.

எமது புலனாய்வு விடுதலைப் புலிகளின் பகுதியிலும், இராணுவத்தினரின் பகுதியிலும் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும் என வும் அவர் மேலும் தெரிவித்தார்.

காட்டுப்பகுதியிலிருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

மஸ்கெலியா கடுகஸ்தன காட்டுப்பகுதியில் 25 வயது மதிக்கத்தக்க இளம் பெண்ணின் சடல மொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டது.

காட்டில் சடலமாக மீட்கப்பட்ட பெண் மஸ்கெலியாப் பகுதியைச் சேர்ந்தவரென இனங்காணப்பட்டுள்ளார்.

இந்த இளம் பெண்ணின் மரணம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நடேசனைப் படுகொலை செய்தமை ஜனநாயகத்தைக் கொன்றதற்குச் சமன்

உடுவே தம்மலோக தேரர் தெரிவிப்பு

பத்திரிகையாளர் நடேசனைப் படுகொலை செய்தமை நாட்டின் ஜனநாயகத்தைக் கொன்றமைக் குச் சமனானது என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

வீரகேசரி செய்தியாளரும் சிரேஷ்ட செய்தியாளருமான நடேசன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

உலகில் எந்த நாட்டிலும் பத்திரிகையாளர் தமது கருத்தினை வெளியிடுவதற்கு ஜனநாயக உரிமை உண்டு. அதனை இலங்கை அரசியல் அமைப்புக்கூட ஏற்றுக் கொண்டுள்ளது. ஊடகவியலாளரின் செயற்பாட்டை முன்னெடுக்க இடம் வழங்காமல் அவரைக் கொலை செய்தமை நாட்டின் ஜனநாயகத்தினைக் கொலை செய்தமைக்குச் சமனானது.

இந்தப் படுகொலைச் சம்பவம் குறித்து ஆராய்வதற்கு அரசாங்கத்தால் விசேட குழுவொன்று அமைக்கப்படவேண்டும்.

அத்துடன், இனமத பேதங்கள் அற்ற நிலையில் அனைத்து ஊடகவியலாளர்களையும் காப்பாற்ற வேண்டியது எம்மைப் போன்றவர்களின் கடமையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு புதிய பீடாதிபதி நியமிக்கப்படுவார்

கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்குப் புதிதாகப் பீடாதிபதி ஒருவர் நியமிக்கப்பட இருப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படுவதற்கு முன்பு புதிய பீடாதிபதியின் பெயர் அறிவிக்கப்படும்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் கல்வியியற் கல்லூரி மூடப்பட்டிருந்தமைக்கான பினக்குகள் தொடர்பாக ஆராயப்பட்டது. குறிப்பாக இதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழு ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி நிர்வாகம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இதனடிப்படையில் அங்குள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல் தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படவுள்ள கல்வியியற் கல்லூரிக்கு 1 ஆம் 2 ஆம் வருடமாணவர்கள் அன்றைய தினம் மாலை ஐந்து மணிக்கு முன்னதாக சமூகம் அளிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. தொடர்ந்து எவ்வித இடர்பாடுகளும் இன்றிக் கல்விச் செயற்பாடு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் சந்திப்பிற்காக வந்த இலங்கைக்கான உலகவங்கி வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்டை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதைக் காணலாம்.

பிந்துணுவெவ படுகொலைச் சம்பவம்

மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க 5 பேரடங்கிய நீதியரசர் குழு நியமனம்

(கொழும்பு)

பிந்துணுவெவவில் நடைபெற்ற படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட நபர்கள் செய்துள்ள முறையீட்டை விசாரிப்பதற்கு ஐவர் அடங்கிய நீதியரசர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் அசோக டி சில்வாவைத் தலைவராக உயர் நீதிமன்ற தலைவர் சரத் என் சில்வா நியமித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பண்டாரவளை பிந்துணுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 பொதுமக்களைக் கொலை செய்தது தொடர்பாகப் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கின் மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அரசியற்துறை அலுவலகம்மீது மண்ணூரில் கிரனேட் வீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூரில் விடுதலைப்புலிகளின் அரசியற்துறைச் செயலகத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் கிரனேட் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தக் குண்டுவீச்சுக் காரணமாக அலுவலகத்தின் கூரை சேதமடைந்து இருப்பதாக வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் இடம்பெற்றபோது அரசியற்துறை அலுவலகத்தில் யாரும் இருக்க வில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சவுதியில் கொல்லப்பட்ட பிரதீப்பின் சடலம் இன்று கொழும்புக்குக் கொண்டுவரப்படும்

சவூதி அரேபியாவின் கிழக்குப் பகுதி எண்ணெய்த் தொழிற்சாலை வளாகத்தில் வைத்துச் சுட்டுக் கொலைப்பட்ட இலங்கையர்களில் ஒருவரின் சடலம் இன்று கொழும்புக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

கொழும்பு மோதறையைச் சேர்ந்த பிரதீப் அந்தோனி என்பவரின் சடலமே இன்று கொண்டு வரப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை - இந்தச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட மற்றைய நபரான நுவரெலியாவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்பவரின் சடலத்தை இலங்கைக்கு அனுப்புவது குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு நியமிக்காமையால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியவில்லை

தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு இன்னமும் நியமிக்கப்படாமையினால் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை உரியமுறையில் மேற்கொள்வதற்கு முடியாதுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் சீர்திருத்தச் சட்டங்களை மறுசீரமைக்கும்போது சிறுபான்மை சமூகங்களும் சிறிய கட்சிகளும் பாதிக்கப்படாத வகையில் அமையவேண்டும்.

நாட்டின் தேர்தல் நடை முறை தொடர்பாக பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட 17 ஆவது திருத்தச் சட்டம் இன்னமும் உரியமுறையில் செயற்படுத்தப்படாமல் உள்ளது. பிரதானமாக அரசியலமைப்பு சபை தனது கடமைகளை உரிய முறையில் அடையாளப்படுத்த முடியாமல் உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரை 5 பேர் கொண்ட ஆணைக்குழுவுக்கு அவசியம் இல்லை. இரண்டு அல்லது மூன்று பேர் ஆணைக்குழுவுக்குப் போதுமானது.

எவ்வாறாயினும், தற்போதைய நிலையில் சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு இயங்காமல் இருக்கின்றமைதான் கவலைக்குரியது. தற்போது தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஆராயப்படுகின்றது.

விகிதாசார தேர்தல் முறையையும், தொகுதிவாரித் தேர்தல் முறையையும் இணைத்துப் புதியதொரு தேர்தல் முறையை உருவாக்குவது குறித்து, நாடாளுமன்றத் தேர்தலை நாடாளுமன்றத் தேர்தல் தெரிவுக்குழு ஆராய்ந்து வருகிறது. தேர்தல் முறை மாற்றம் இந்த நாட் டிலுள்ள சிறுபான்மை சமூகங்களையும் சிறிய கட்சிகளையும் பாதித்துவிடக்கூடாது.

தேர்தல் சீர்திருத்த முறை குறித்து ஏனைய நாடுகளில் நடை முறையிலுள்ள தேர்தல் முறைகள் பற்றியும் நாங்கள் பரிசீலிக்க வேண்டும்.

சிறுபான்மை சமூகங்களையும் சிறிய கட்சிகளையும் பாதிக்காத வகையில், அதேவேளை பெரும் பான்மை அரசாங்கம் ஒன்று அமையக்கூடிய வகையிலான தேர்தல் முறையே இங்கு பொருந்தக் கூடியது என அவர் மேலும் தெரிவித்தார்.

பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான

முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செயின்ட் லூசியாவில் நடந்தது. பங்களாதேஷ் முதல் இனிங்ஸில் 416 ஓட்டங்களும், மேற்கிந்தியத் தீவுகள் முதல் இனிங்ஸில் 352 ஓட்டங்களையும் எடுத்தன.

64 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் ஐந்தாம் நாள் ஆட்டம் நடந்தது. விக்கெட் காப்பாளர் காலித் மசூத் மிகவும் சிறப்பாக ஆடி தோல்வி பெறாமல் பார்த்துக் கொண்டார். பங்களாதேஷ் அணி 9 விக்கெட் இழப்புக்கு 271 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்துவதாக அறிவித்தது.

காலித் மசூத் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும், ராஜின் சாலே 51 ஓட்டங்களும் எடுத்தனர். சர்வான் 4 விக்கெட்டுக்களையும், எட்வேட்ஸ் 2 விக்கெட்டுக்களையும், கொலின்ஸ், கெய்ல், பெஸ்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு 336 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆட்டத்தின் முடிவில் அந்த அணி விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதனால், இந்த டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. கெய்ல் 66, ஸ்மித் 40 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட் ஜமேக்காவில் நாளை தொடங்குகின்றது.

பங்களாதேஷ் அணியின் தரம் இந்த டெஸ்டில் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வந்த அணி கற்போது டெஸ்ட் போட்டியை சமநிலையில் முடித்துள்ளது. இந்த டெஸ்டில் 3 பங்களாதேஷ் வீரர்கள் சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் சபையிலிருந்து விலகிவிட மாட்டேன்!

ரமீஸ் ராஜா கூறுகிறார்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி பதவியில் தொடர்ந்து நீடிக்கப்போவதாக ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

வர்ணனையாளராகவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகியாகவும் இருந்துவரும் ரமீஸ் ராஜா இந்த இரண்டில் ஏதாவது ஒரு பதவியில் மட்டுமே நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்த வண்ணம் உள்ளன. ஆனால், இதற்கெல்லாம் ரமீஸ் ராஜா அடி பணிவதாகத் தெரியவில்லை.

தலைமை நிர்வாகி பதவியில் தொடரப்போவதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் நலனுக்காக இன்னும் நிறையப் பணிகள் செய்யவேண்டி இருப்பதாகவும் ரமீஸ் ராஜா தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகியான ரமீஸ் ராஜா இது குறித்துக் கூறுகையில் - தலைமை நிர்வாகி பதவியிலிருந்து நான் விலகவேண்டும் என்று யாராவது நினைத்தால் அது தவறான எண்ணமாகும்.

தலைமை நிர்வாகி பதவியில் இருக்கும் சவால் எனக்கு என்றைக்கு வெறுத்துப்போகிறதோ அன்றுதான் நான் இந்தப் பதவியை விட்டு விலகுவேன்.

ஆனால், அது விரைவில் நடந்து விடாது. ஏனெனில் பாகிஸ்தானின் கிரிக்கெட் வளர்ச்சிக்காக ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய உள்ளன என்று ரமீஸ் ராஜா கூறியதாக த நியூஸ் என்ற பத்திரிகை செய்தி தெரிவிக்கின்றது.

இங்கிலாந்துடனான

இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது



ஸ்ரீபன் பிளெமிங் தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இரு அணிகள் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி ஹெட்டிங்லேயில் இன்று தொடங்கவுள்ளது.

முதல் டெஸ்டில் காயம் காரணமாக விளையாடாத இங்கிலாந்து கப்டன் வோகன் இன்றைய டெஸ்டில் விளையாடுகிறார். நசார் ஹுசைன் ஓய்வுபெற்றதால், புதுமுக வீரர் ஸ்ட்ராசுக்கு இந்த டெஸ்டில் வாய்ப்புக் கிடைக்கும்.

வோகனுக்குப் பதிலாக முதல் டெஸ்டில் விளையாடிய அவர் முத்திரை பதித்தார்.

வீரர்களின் காயத்தால் நியூஸிலாந்து அணி பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளது. முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான மக்மிலன், சகலதுறை ஆட்டக்காரர் ஜேக்கப் ஓரம் ஆகியோர் காயமடைந்துள்ளனர். இருவரும் இன்றைய டெஸ்டில் விளையாடுவது சந்தேகமே.

2 ஆவது டெஸ்டிலும் வெற்றி பெற்றால் இங்கிலாந்து தொடரைக் கைப்பற்றிவிடும். இதனால் நியூஸிலாந்து வீரர்கள் வெற்றிக்காக ஆட வேண்டிய நிலையில் உள்ளனர்.

டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கு சிம்பாப்வேக்கு தடைவிதிக்க வேண்டும்

ஸ்ரீவ் வோ வேண்டுகோள்

சிம்பாப்வே கிரிக்கெட் அணி டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்கு தடை விதிக்கவேண்டும் என்று அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ் வோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஸ்ரீவ் வோ அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது - திறமையின் அடிப்படையில் அணியைத் தேர்வுசெய்யப்படுவதை விடுத்து, இனவெறியின் அடிப்படையில் அணியைத் தேர்வுசெய்யும் அணிகளை அனுமதிக்கக்கூடாது.

அதன் அடிப்படையில் சிம்பாப்வே அணியை டெஸ்ட் போட்டிகளில் விளையாட அனுமதிக்கக்கூடாது. சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் ரத்தானது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், ஒரு நாள் தொடர் நடைபெற்றது எனக்கு வருத்தமளிப்பதாக இருந்தது.

டெஸ்ட் போட்டித் தொடர் எப்படி ரத்துச் செய்யப்பட்டதோ அதே முறையும் ஒருநாள் போட்டித் தொடருக்கும் கடைப்பிடிக்கப்பட்டு இருக்கவேண்டும்.

ஒருநாள் போட்டித் தொடரில் அவுஸ்ரேலிய அணி ஏன் விளையாடியது என்பது குறித்து எனக்கு தெளிவாகத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

ஆனால், சிம்பாப்வே தொடரை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொன்டிங் சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடியது சரியே என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாப்வே கிரிக்கெட் அணியிலிருந்து 15 வீரர்கள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் பிரச்சினை தலைதூக்கியது. இதனால், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சிம்பாப்வே ரத்துச்செய்தது.

இந்த நிலையில், சிம்பாப்வே அணியின் டெஸ்ட் அந்தஸ்து குறித்து இம்மாத இறுதியில் சர்வதேச கிரிக்கெட் சபை முடிவெடுக்கவுள்ளது.

இப்படி வலுக்குறைந்த சிம்பாப்வே அணியுடன் விளையாட விரும்பவில்லை என்று ஏற்கனவே

தென்னாபிரிக்கா அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஸ்ரீவ் வோ அவுஸ்ரேலிய - சிம்பாப்வே அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடர் ரத்தானதற்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். மேலும் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரும் ரத்துச் செய்யப்பட்டிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கங்கூலி தொடக்க வீரராக களமிறங்குவாரா?

பத்திரிகை பேட்டியில் அவரே தெரிவிப்பு

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் டெண்டுல்கர், ஷேவாக், நான் (கங்கூலி) ஆகிய 3 பேரில் 2 பேர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்குவோம் என்று இந்திய அணிக் கப்டன் கங்கூலி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் -

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர், ஷேவாக் மற்றும் நான் (கங்கூலி) ஆகிய 3 பேரில் 2 பேர் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்குவோம்.

இந்தப் போட்டியின் முதல் சில ஆட்டங்களில் சிறப்பாக ஆடுபவர்கள் தொடக்க வீரர்களாக இறக்கப்படுவார்கள். நானும் ஏற்கனவே பல ஆட்டங்களில் தொடக்க வீரராக இறங்கி சிறப்பாக ஆடியுள்ளேன்.

ஒருநாள் போட்டியைப் பொறுத்த வரையில் யுவராஜ்சிங் தொடக்க வீரராகக் களம் இறக்கப்பட மாட்டார். சுமார் 2 மாத கால ஓய்வுக்குப் பின்னர் ஆசியக் கோப்பைப் போட்டியில் ஆடவுள்ளோம்.

எனவே, மிகவும் எச்சரிக்கையாக விளையாடுவோம்.

அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் பயணத்திற்கு முன்பு நியூஸிலாந்து அணிக்கு எதிராக ஆடிய போது 5 மாத கால ஓய்வுக்குப் பின்னர் விளையாடினோம். அப்போது நமது அணி சிறப்பாக ஆடவில்லை.

எனவே, தற்போது இந்தப் போட்டியில் மிகவும் எச்சரிக்கையுடன் சிறப்பாக ஆட முயற்சி செய்வோம். அவுஸ்ரேலிய அணி இந்தியாவில் பயணம் செய்து விளையாடும் போது 2001 ஆம் ஆண்டு அந்த அணிக்கு எதிராக இந்திய அணி எப்படி ஆடியதோ அதை விடவும் சிறப்பாக ஆடுவோம்.

2001 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்தபோது சுழற்பந்து வீச்சில் ஹர்பஜன்சிங்கை மட்டுமே வைத்து வெற்றிபெற்றோம்.

ஆனால் - தற்போது ஷகீர்கான், இர்பான் பதான் எல்.பாலாஜி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். மேலும் இந்தத் தொடரில் ஹர்பஜன் சிங்கும் இடம்பிடிப்பார்.

எனவே, மொத்தத்தில் பந்துவீச்சில் இந்திய அணி வலிமை மிக்கதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் ஷேவாக்குடன் தொடக்க வீரராக யுவராஜ்சிங் களம் இறங்குவார் - இவ்வாறு கங்கூலி கூறினார்.

எதியோப்பிய வீரர் புதிய சாதனை

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச தடகளப் போட்டியில் 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் எதியோப்பிய நாட்டைச் சேர்ந்த சௌன்சியா பெகாலே புதிய உலக சாதனை படைத்தார். அவர் இந்தத் தூரத்தை 12 நிமிடம் 37.35 வினாடியில் கடந்து தங்கப்பதக்கம் பெற்றார்.

இதற்கு முன்பு 1998 ஆம் ஆண்டு எதியோப்பிய வீரர் ஜெப்ரலாசி 12 நிமிடம் 39.36 வினாடிகளில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது. 6 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த சாதனையைப் பெகாலே முறியடித்துள்ளார்.

ஆசியக் கோப்பை போட்டியில் அக்தர் விளையாடுவார்!

தனக்கு ஏற்பட்ட காயத்திலிருந்து நல்ல முறையில் குணமடைந்து வருவதாகவும், எதிர்வரும் ஆசியக் கோப்பை போட்டியில் விளையாடவிருப்பதாகவும் பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்தார்.

இலங்கையில் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அக்தர் தேர்வுசெய்யப்படவேண்டும் எனில், அவர் தனது உடற்தகுதி மற்றும் நடத்தை குறித்த சோதனைகளில் பங்கேற்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹ்ராரியார் கான் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், கவுண்டி கிரிக்கெட் போட்டியில் தனது அபார பந்துவீச்சு மூலம் அணிக்கு வெற்றி தேடித்தந்த அக்தர், ஷஹ்ராரியார் கானின் நிபந்தனைகள் தனக்கு வருத்தமளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஷஹ்ராரியார்கான் அக்தர் குறித்து வெளியிட்ட கருத்துக்கள் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளியாகின. இதற்குப் பதிலளித்த சொகைப் அக்தர் இப்படிப்பட்ட கருத்தை ஷஹ்ராரியார் கான் கூறுவதன் காரணம் என்ன வென்று தெரியவில்லை. எதன் காரணமாக இப்படிக் கூறினார் என்று தெரியவில்லை.

ஆசியக் கோப்பை போட்டியில் நிச்சயம் விளையாடுவேன். விலாவில் ஏற்பட்ட காயத்திலிருந்து நான் நல்ல முறையில் குணமடைந்துள்ளேன்.

இந்த நிலையில் தனது உடற்தகுதி குறித்த அறிக்கையை கிரிக்கெட் சபைக்கு அனுப்பியிருப்பதாகவும், இதன்மூலம் ஆசியக் கோப்பையில் விளையாடுவதை உறுதி செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புகைத்தல் எதிர்ப்பு கொடிவாரம்

இலங்கை சமூர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்திப் பிரிவினரால் - புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு கொடிவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது எதிர் வரும் 7 ஆம் திகதிவரை அனுஷ் டிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் கிடைக்கும் நிதி அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவு களில் உள்ள சமூர்த்தி சமூக அபி விருத்தி மன்றினூடாக - அந்தந்தப் பிரதேசங்களில் இனங்காணப்பட்ட விதவைக் குடும்பங்களுக்கு உதவு தல், ஊனமுற்றோர் நலன் உதவி கள், உறவினர்களால் கைவிடப் பட்ட முதியோர்களுக்கு உதவுதல் போன்ற நற்பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளது. (116)

துரித அபிவிருத்தித் திட்டத்திற்கு கிராமங்கள் தெரிவு

வடமராட்சி கிழக்கு மருதங் கேணி உதவி அரசாங்க பிரிவில் இருந்து இந்த ஆண்டு நிகொட்டின் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஆழியவளை, உடுத்துறை ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட் டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் 70 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப் பட்டுள்ளது. (17)

நீதிமன்றில் விடுவிக்கப்பட்ட

இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாடுகின்றார்கள்!

கடற்படையினரின் அசமந்தப் போக்கே காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்றத்தால் கடந்த 19 ஆம் திகதி விடுவிக்கப் பட்ட இந்திய மீனவர்கள் கடற்படை யினரின் அசமந்தப் போக்கால் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலை யிலேயேதடுத்து வைக்கப்பட்டுள்ள னர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி யாழ். மாவட்ட மேல் நீதிமன்றத்தி னால், 13 இந்திய மீனவர்கள் விடு விக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 5 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவர் கள் கடல் வழியாக கடற்படையின் உதவியோடு அனுப்பிவைக்கப்பட்டி ருந்தனர்.

எனினும், ஏனைய எட்டு மீனவ ரையும் கடந்த மாத இறுதிக்குள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதாக அரசு தெரி வித்திருந்தது. எனினும் அவர்கள் இன்றுவரை அனுப்பிவைக்கப்பட வில்லை.

குறிப்பாக கடற்படையினரின் அசமந்தப் போக்காலேயே இவர் கள் இதுவரை அனுப்பிவைக்கப் படாமல் உள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக இலங்கைக் கடற்படை வட்டாரங்களிடம் யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பு கொண்டவேளை, இந்தியக் கடற் படையினரே அசமந்தமாக இருப்ப தாகவும், அதனாலேயே இந்தக் கைதிகள் விடுவிப்புத் தாமத மாவதாகவும் தெரிவித்தனர்.

யாழ். சிறைச்சாலையில் இட நெருக்கடி நிலவும் சூழலில் விடு விக்கப்பட்ட கைதிகள் தொடர்ந்தும் சிறையில் வாடுவது விடுவிக்கப் பட்டவர்களுக்கும், சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் பெரும் சிக் கலை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணை யாளர் என்.செல்வக்குமரன் நேற்று முன்தினம் யாழ். சிறைச்சாலைக் குச் சென்று கைதிகளுடன் கலந்து ரையாடல் ஒன்றை நடத்தியதாக வும் தெரியவருகிறது. (ப)

யாழ். நகரப் பகுதியில்

பிக்பொக்கற் அடித்தவருக்கு 2 வருட சிறைத்தண்டனை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் 'பிக் பொக்கற்' அடித்த நபருக்கு யாழ். நீதிமன்றில் இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ். நகரப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை மதியம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பேர்ஸைத் திருடியவரை பொது மக்கள் மடக்கிப் பிடித்து யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பிக்பொக்கற் திருட்டில் ஈடுபட்டவர் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவ்வேளை, விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மாவட்ட நீதி வான் ஆர்.ரி.விக்னராஜா குற்றவா ளிக்கு இரண்டாண்டு சிறைத் தண்ட னையை விதித்தார். அத்தோடு திருடிய பணத்தையும் உரியவரி டம் ஒப்படைக்குமாறு கட்டளையிட் டார். (ப)

பெயர் : ம.மதுசனா
முகவரி : கரவெட்டி

பெயர் : பி.மதுஷன்
முகவரி : கந்தர்மடம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல்

நெல்லியடி பொது சுகாதார பரிசோதனைப் பிரிவில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் அனுசரணையுடன் ஜூன் மாதம் முதலாவது விலங்கு விசர்நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

விலங்கு விசர் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகை யில் பாடசாலை மாணவர்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக் கப்பட்டு வருகிறது.

இந்த மாதம் 7 ஆம் திகதிவரை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து 20 ஆம் திகதிவரை நாய்களை மலடாக்கும் நடவடிக்கையும், 29 ஆம் திகதி வரை கட்டாக்காலி நாய்கள் அழிக் கப்பட்டுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கான தடுப் பூசி மருந்துகள் பின்வரும் இடங் களில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை வதிரி புலவரா வோடை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திலும், 1.00 மணிமுதல் 3.00 மணிவரை வதிரி சிகிச்சா நிலையத்திலும்,

நாளை காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை நெல்லியடி தடங் கன் புளியடி சனசமூக நிலையத் திலும், 1.00 மணிமுதல் 3.00 மணி வரை கலட்டி சனசமூக நிலையத் திலும்,

நாளை மறுதினம் காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை நாவ லர் மடம் கால்நடை வைத்திய சாலையிலும் 1.00 மணிமுதல் 3.00 மணிவரை முடக்காடு சுடர் ஒளி சனசமூக நிலையத்திலும்,

7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை கட்டைவேலி சிகிச்சை நிலையத்திலும் 11.00 மணிமுதல் 12.30 மணிவரை கரவெட்டி மத்திய ஐங்கரன் சனசமூக நிலையத்திலும் விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற் றப்படவுள்ளது என பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலை நடத்தாதது அடிப்படை மனித உரிமைமீறல்!

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அச்சுவேலி வாசி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் நடத்தப் படாமை மனித உரிமையை மீறும் செயல் எனத் தெரிவித்து அச்சு வேலிவாசியொருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள் ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த சி. துரைராசா என்பவரே இந்த முறைப் பாட்டைச் செய்துள்ளார். இந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது -

யாழ். மாவட்டம் உட்பட நாட் டின் வடக்கு - கிழக்குப் பகுதி களில் உள்ள உள்ளூராட்சிச் சபை கள் மற்றும் மாகாணசபைகளுக் கான தேர்தல்கள் பல ஆண்டு களாக இடம்பெறவில்லை. இத னால், பல்வேறு பகுதிகளில் புனர் நிர்மாண அபிவிருத்தி முதலான பணிகள் முடங்கிய நிலையில் உள்ளன.

பொதுத்தேர்தல்கள் மட்டும் இந்தப் பிரதேசங்களில் ஒழுங்காக நடைபெறும்போது ஏன் உள்ளூ ராட்சி, மாகாணசபைகளுக்கான தேர்தல் மட்டும் இடம்பெறுவதில்லை.

இவ்வாறு மாகாணசபை, உள் ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமை களைப் பறிப்பது போன்றதொரு செயலாகும் எனவும் தனது முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யில் விடைத்தாள் திருத்தும் முத லாம் கட்டப் பணி தொடர்ந்தும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமைவரை நடைபெறவிருப் பதனால்,

எதிர்வரும் 7 ஆம் திகதியே கல்லூரி கற்பித்தல் நடவடிக் கைகளுக்காக மீளத் திறக்கப்ப டுமென கல்லூரி அதிபர் அறிவித் துள்ளார்.

விடைத்தாள் திருத்தும் 2 ஆம், 3 ஆம் கட்ட வேலைகளும் கல் லூரி நடைபெறும்போதே மேற் கொள்ளப்படுமென்பதால், அதற் காக விசேட விடுமுறைகள் எது வும் விடப்படமாட்டாதெனவும் மாண வர்களும், ஆசிரியர்களும் எதிர் வரும் 7 ஆம் திகதி திங்கட் கிழமையே கல்லூரிக்குச் சமூக மளிக்கவேண்டும் எனவும் அதிபர் மேலும் தெரி வித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் நடைபெற்று வரும் கலைவார நிகழ்வின் ஒரு அங்கமாக நடைபெற்ற 'மேன் மக்கள்' என்னும் மூன்றாம் வருட மாணவர்களின் நாடக நிகழ் வின் ஓர் காட்சியைப் படத்தில் காணலாம்.

நிவாரண விநியோகம் தொடர்பான

சுற்றுநிருபத்திற்கு அமைவாகவே நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்

கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்து

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கில், புரிந்து ணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் மீளக் குடியேறிய குடும்பங் களுக்கு இலவச நிவாரணம் வழங் கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பான சுற்றுநிருபத்திற்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுத பிள்ளை, தமது பிரிவுக் கிராம அலுவலர்களுக்கு அறிவித்துள் ளார்.

2004 மாசி மாத இலவச நிவா ரண விநியோகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட பின்னர் மீளக் குடியமர்ந்த குடும்பங்கள், நண்பர்கள், உறவினர்கள் வீடு களில் தற்காலிகமாக தங்கியிருக் கும் குடும்பங்கள், நலன்புரி நிலை யங்களில் வசிக்கும் குடும்பங்க ளைத் தவிர வேறு எவருக்கும் உலர் உணவு பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கவேண் டாம் எனவும், அப்படி வழங்கப்பட் டால் அதற்குரிய பொறுப்பையும் கட்டண அறவீட்டையும் குறிப் பிட்ட கிராம அலுவலரே பொறுப் பேற்க வேண்டி ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இந்தத் தரத்தில் இல்லாதவர்களுக்கு பங்கீட்டு அட்டை வழங்கப்பட்டிருப்பின் உடனடியாக விபரத்தைக் கூறி மீளப் பொறுப்பேற்று ஒப்படைக்கு மாறும் அவர் அறிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர் பான முடிவுகள் யாழ். அரச அதி பரால் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(122)

ஜூலை 12 – 18 வரை உள்ளூராட்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதிமுதல் 18 ஆம் திகதி வரை உள்ளூராட்சி வாரமாக உள் நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு பிரகடனப் படுத்தியுள்ளது.

இக்காலப் பகுதியில் உள்ளூ ராட்சி திணைக்களங்களால் பல் வேறு செயற்திட்டங்கள் மேற்கொள் ளப்படுவதுடன், பல்வேறு நிகழ்ச்சி களும் நடத்தப்படவுள்ளன.

இந்த ஒருவாரப் பகுதியில் சுகா தாரம், விளையாட்டு, அபிவிருத்தி, சுற்றாடலைப் பேணல், கல்வி அபிவிருத்தி போன்ற துறைகளில் பல செயற்திட்டங்கள் மேற்கொள் ளப்படவுள்ளன.

இறுதிநாளான 18 ஆம் திகதி பரிசளிப்பு விழா உள்ளூராட்சித் திணைக்களங்களில் இடம்பெற வுள்ளன.

வாடிக்கையாளர்களை அன்புடன் அணைகுங்கள்

வியாபாரத்தின் அத்திவாரமாக இருப்பது அன்பான விசாரிப்புத்தான். இதன்மூலம் வாங்க வந்திருப்பவர்களுக்கு என்ன தேவை, எந்த மனநிலையில் இருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளமுடியும்.

விசாரிப்பின் முதல் வார்த்தை முக்கியமானது. கொஞ்சம் இருங்கள், என்ன வேண்டும். ஏதாவது பார்க்கிறீர்களா? போன்ற சொற்களைப் பயன்படுத்தாமல் இருக்கவேண்டும். இது நல்ல தொடக்கம் அல்ல! வருகின்றவர்களின் மனோநிலையைப் பார்த்தவுடனேயே அறிந்துகொள்வது மிகவும் சிறப்பானது.

அன்பான முறையில் மென்மையான வகையில் விசாரிப்பின்மூலம் அவர்களுக்குத் தேவையானதை அறிந்துகொள்ளவேண்டும். வழக்கமாக வருபவர்களாக இருந்தால் தங்களைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டது என்ற நட்புரிமையோடு கேட்கவேண்டும்.

நீங்கள் சென்றமுறை வந்து கேட்ட பொருள் இப்பொழுது வந்திருக்கிறது. பார்க்கிறீர்களா என்று கூறுவதன்மூலம், தோழமை உணர்வை உண்டாக்கி விடமுடியும்.

விசாரிப்பு அளவோடு இருப்பது நல்லது. வியாபாரத்தை முடிக்கும் அளவுக்குத்தான் இருக்கவேண்டும். அளவுக்கு மீறிவிட்டால் வியாபாரம் கெட்டுவிடும். வந்திருப்பவர்கள் அதிகம் கதைப்பவர்களாக இருப்பின் நாம் கதையைச் சுருக்கிக்கொள்ளவேண்டும்.

அவருக்குச் சமமாகப் பேசிக்கொண்டு இருக்கக்கூடாது. அதிக பிரசங்கியாக இருப்பாரோ என்று எம்மைப்பார்த்து எண்ண ஆரம்பித்துவிட்டால், வியாபாரம் தடைப்பட வாய்ப்பு உண்டாகலாம். வருபவர்களுடைய பேச்சை புன்முறுவலுடன் தலையை அசைத்துக் கேட்கவேண்டும். அவ்விதம் செய்தால் நேரம் வீணாகிப்போகிறதே என்று எண்ணக்கூடாது.

ஏனென்றால் அப்படிச் செலவழிக்கும் நேரம்தான் வியாபாரம் நடைபெறுவதற்கான சரியான சமயம் ஆகும். இதன் மூலமே நம்மீது நல்ல அபிப்பிராயம் ஏற்படும். அதன் பின்பு நாங்கள் கூறுவதற்கு எல்லாம் சரியென்று இணங்க ஆரம்பித்துவிடுவார்.

வருகின்றவர்களின் மனதில ஒரு இடத்தில் பொருளை வாங்கவேண்டும் என்ற சாதகமான சூழ்நிலை உருவாகும்.

இப்படி அன்னியோன்னியம் ஏற்பட்ட பிறகு தங்களுக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். வருகின்றவர்களின் மனக்கதவுகளில் எல்லாமே மூடப்பட்டிருந்தாலும், ஏதாவது ஒரு கதவு எங்கேயாவது ஒரு மூலையில் திறந்தே இருக்கும். அந்தக் கதவைத் தொடர்ந்து தட்டிக்கொண்டே இருக்கவேண்டும்.

"நீங்கள் எல்லாம் வாங்க மாட்டீங்கள்" என்று கூறும் வார்த்தைகள் நிரந்தரமாக எம்மிடம் வாங்காமல் செய்துவிடும். இது அவர்களை அவமதிப்பது போலாகும். அவர்களுடைய மனத்தை மிகவும் புண்படுத்திவிடும்.

நல்லுறவை, எஸ்நேகபாவத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கவில்லை என்றால், வியாபாரம் வீணாவதை யாராலும் தடுக்கமுடியாது.

இப்படி அன்னியோன்னியம் ஏற்பட்ட பிறகு வருகின்றவர்கள் ஒன்றைக்கேட்டால் வேறு ஒன்றைக் காட்டி வாங்காமல் செய்துவிடக் கூடாது. விசாரிப்புக்கு ஏற்றவகையில்தான் எதனையும் செய்யவேண்டும்.

ஒருவர் ஒன்றை வாங்குகிறார் என்றால் அது அவருக்கு சொத்தாகிறது. பணத்தின் மறு வடிவமாகிறது. சேமிப்பாகவும் இருக்கிறது. வாங்கப்படும் பொருட்களின்மூலம் மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படுகிறது.

புதிய பொருட்களைப் பார்த்தவுடன் அதனை வாங்கத்துடிக்கும் ஆர்வம் தானாக ஏற்படச் செய்கிறது. நல்ல நாட்டம் ஏற்படவில்லை என்றாலும் விற்பனை செய்பவரின் சாமர்த்தியத்தால் பொருளை வாங்க வைக்கமுடியும்.

வருகின்றவர்களிடம் பேச்சுக்கொடுத்து அவர் என்ன காரணத்திற்காக வந்திருக்கிறார் என்று தெரிந்துகொண்டால், சும்மா பார்க்கிறேன் என்று சொல்லுகிறவரைக்கூட வாங்க வைத்து விடமுடியும்.

வியாபாரத்தில் அன்பு தழுவிய உபசாரமும், இனிமையான உரையாடலும் நிலவ வேண்டுமே தவிர, கண்டு கொள்ளாத தன்மையும் செவிட்டுத்தன்மையும் நிலவக்கூடாது. வருபவர்களுடைய விருப்பம் என்ன என்பதை முதலில் அறிய வேண்டி விசாரிப்பது முதல் கடமையாகும். அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். விருப்பத்தை அசட்டை செய்யக் கூடாது. மறுத்துப் பேசக்கூடாது. அவருடன் பேசி ஒத்துழைக்கவேண்டும். அவர் போக்கிலேயே விற்பனையைத் தொடரவேண்டும். வாங்க வந்திருப்பவர்களிடம் அவர்கள் விரும்பாத பொருட்களை விற்பனை செய்வது கெட்டிக்காரத்தனம் அல்ல. ஒருவரிடம் விசாரித்து அறியாமல் அவருடைய விருப்பு வெறுப்புக்களை எவ்விதம் அறியமுடியும்? விசாரிப்பு உள்ளங்களின் உறவாடல் என்பதை கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும். வாங்குபவரிடம் கேள்விகளைக் கேட்டுவிடக்கூடாது.

அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தான் பதில் சொல்லவேண்டும். அவர்கள் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்டு, மனநோக்கத்தை அறிந்து அதற்கு ஏற்றபடிதான் வியாபாரம் செய்யவேண்டும். அவர்கள் கூறுவதை எதிர்த்துப் பேசவோ, அலட்சியம் செய்யவோ கூடாது. இதன் மூலம் விற்பனை அதிகரிப்பதோடு வாடிக்கையாளர்களையும் தக்க வைத்திருக்கமுடியும்.

நன்றி - தொழில் உலகம்

தன்னைத்தானே ஒழுங்குபடுத்துவதன்மூலம் சிறந்த முறையில் தொழிலை மேற்கொள்ளலாம்

தொழில் புரிஞர் ஒருவர் தன்னைத் தானே எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்வது என்பதை அறிந்து கொள்ளல் அவசியமானதாகும். தொழில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் தொழிலின் மேன்மைக்கும் இவ்வாறான ஒழுங்குபடுத்தல் மிகவும் முக்கியமானதாக அமைகிறது.



தொழில் புரிஞர் தன்னைத்தானே ஒழுங்குபடுத்துவதன் மூலமாகத் தமது வேலையை திட்டமிடுதலிலும், முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்களைக் கண்டு கொள்வதிலும் தன்னிடம் உள்ள பலவீனங்களை குறைத்துக்கொள்வதிலும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த நாளில் இந்த வேலைகளை செய்து முடிக்க வேண்டும். இன்ன இன்ன முறைகளில் தொழிலை செய்யவேண்டும். இத்தனை நாளில் வேலையைச் செய்துமுடித்தல் வேண்டும். இந்தவகையில் தொழில் புரிஞர் தனது வேலைகளைத் திட்டமிட்டுக் கொள்வதன்மூலம் அதிக பயன்பாடு அடைகின்றான்.

ஒரு தொழில் புரிஞருக்கு பல்வேறு வேலைகள் காணப்படலாம். அந்த வேலைகளை ஒரே நாளில் ஒரே தடவையில் அவரால் செய்துகொள்ள முடியாமல் போகலாம். எனவே, எந்த வேலையை எப்போது செய்து கொள்வது. எந்த வேலைக்கு முதன்மை கொடுப்பது என்று தீர்மானம் செய்து கொள்ளப் படவேண்டியது முக்கியமானதாகும்.

இவ்வாறு செய்து கொள்வதன்மூலமே தொழில் புரிஞர் வெற்றியைப் பெற்றுக் கொள்ளமுடியும். சிறப்பாக தனது தொழிலை ஆற்றமுடியும்.

தொழில் புரிஞர் தன்னைத்தானே ஒழுங்குபடுத்துவதன் மூலமாக தன்னிடமுள்ள பல வீனங்களை இனம்காண்பதன் ஊடாக தன்னுடைய தொழிலை சிறப்பாக செய்துகொள்ள வழியேற்படும்.

பலவீனங்களைக் கண்டு கொள்வதென்பது பிறரின் மூலமாக தெரியவரும்போது தொழில் புரிஞருக்கு சிரமங்களை எற்படுத்தலாம். அல்லது தன்னுடைய பலவீனங்களை பிறர் கூறக்கேட்கும் போது கூறுபவர்மீது எரிச்சல் உருவாகலாம். இந்த நிலையில் ஒருவர் தனது பலவீனங்களை தானே உணர்ந்து கொள்ளும்போது, நன்மையே அதிகம் உண்டாகும்.

எனவே - தன்னைத்தானே ஒழுங்குபடுத்துவதில் முதன்மையான விடயமாகத் தொழில் புரிஞர் தன்னுடைய பலவீனங்களைத் தானே அறிந்து கொண்டு செயற்படும்போது தொழில்கள் சிறப்படையும் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும்.

தன்னைத்தானே ஒழுங்குபடுத்தும்போது தான் வேலைக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றேனா என்பதனை அறிந்து கொள்ளலாம். வேலைகளைப் பூரணப்படுத்துவதற்கு குறித்த வேலைக்கு நபர் பொருத்தமானவராக இருப்பது முதலில் அவசியமானதாகின்றது.

தொழில் புரிஞர் ஒருவர் தன்னுடைய வேலைகளை நீண்ட காலத்துக்கு திட்டமிடவும் ஒழுங்குபடுத்தவும் தினக் குறிப்புக்களைப் பாவித்துக் கொள்வது சிறப்புடையதாகின்றது. தினக்குறிப்பைப் பாவிப்பதன் மூலமாக ஒருவர் தன்னைத்தானே ஒழுங்குபடுத்தலும் இலகுவாகின்றது.

தினக் குறிப்புக்கள் மூலமாக கிழமை ஒன்றில் செய்ய வேண்டிய கடமைகளை விரிவாக ஒழுங்குபடுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டு செலவழிக்கலாம்.

இவற்றின் மூலமாக தொழில் புரிஞர் தொழில்களை நல்ல முறையில் மேற்கொள்வதோடு தொழில் நிறுவனம் சிறப்பாக இயங்கவும் வழியேற்படும்.

பூ.நகுலன்

இலங்கையின் பங்குச்சந்தை

இன்று பங்குச்சந்தை இலங்கைப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது. இதனூடாகவே இன்று சாதாரண உயர்தர பல்கலைக்கழக மட்டத்தில் மாத்திர மன்றி சஞ்சிகைகள் நூல்கள் மட்டத்திலும் முக்கியத்துவம் பெற்றுக்காணப்படுவதால் இந்த ஆக்கமானது வெளியிடப்படுகின்றது.

பங்குச்சந்தை என்பது முதலீட்டாளர் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய தளமாகும். இலங்கையில் இக்கொடுக்கல் வாங்கல்களில் ஏறத்தாழ 239 கம்பனிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை கம்பனியின் செயற்பாட்டின் அடிப்படையில் 16 துறைகளாக வகுக்கப் பட்டுள்ளன. பங்குகளின் விலை நிர்ணயம், பொருட்களின் விலை நிர்ணயம் போன்ற கேள்வி, நிரம்பல் சக்திகளால் தீர்மானிக்கப் படும்.

இலங்கையின் பங்குச்சந்தை வரலாற்றுக்குள் ஊழைய முன் அதற்கு முன்னிருக்கும் சில டிகளை தாண்டவேண்டும். அவையே இங்கு தரப்படுகின்றன.

ஆரம்ப பங்கு வழங்கல்

கம்பனியொன்று முதல்முதலாகத் தனது பங்குகளை வழங்கல் ஆரம்பப் பங்கு வழங்கல் எனப்படும்.

பருவகால பங்குவழங்கல்

கம்பனியானது தனது நிகழ்கால எதிர்கால மூலதனத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வழங்கும் பங்குகளாகும்.

முதலாம்தர பங்குச்சந்தை

இது கம்பனியிடமிருந்து நேரடியாக பங்குகளைக் கொள்வனவு செய்யும் சந்தையாகும். இங்கு இரண்டு கட்சிகளின் செயற்பாடு மாத்திரமே நடைபெறும்.

1. பங்குகள் கொள்வனவு செய்யும் கட்சி
2. பங்குகளை விற்பனை செய்யும் கட்சி

இரண்டாம் தர பங்குச்சந்தை

பங்குகளைப் பரிமாற்றிக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெறும் இடமே இரண்டாம் நிலை பங்குசந்தையாகும். எனவே, இங்கு பங்குகளை கொள்வனவு செய்யும், விற்பனை செய்யும் நடவடிக்கையாளர்கள் ஈடுபடுவர்.

இலங்கை சந்தையின் தோற்றம

இலங்கை பங்குச்சந்தை வரலாறு 1870 ஆம் ஆண்டிலிருந்து அதாவது 19 ஆம் நூற்றாண்டு காலத்திலே பிரித்தானிய ஆட்சியுடன் ஆரம்பமானது எனலாம்.

கோப்பிப் பயிரின் அழிவின்காரணமாக புதிய வருமானம் தரும் தேயிலையைப் பயிரிட எண்ணினர். ஆனால் அதற்கான பணம் அதிகமாகத் தேவைப்பட்டது. இந்த மூலதனப் பற்றாக்குறை காரணமாக புதிதாகப் பணம் திரட்டவேண்டியிருந்தது. இதன் பெறுபேறாக இலங்கையிலும், பிரிட்டனிலும் நாடுகளில் பொதுக் கம்பனிகள் அமைக்கப்பட்டு அதனூடாகப் பங்கு வழங்கி பணம் அறவிடலாம் என உணர்ந்து இதன் பெறுபேறாக 1896 ஆம் ஆண்டு இலங்கை பங்குச்சந்தை தோற்றம் பெற்றது.

இலங்கை பங்குசந்தை

1896 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பங்குச்சந்தை, கொழும்பு பங்குத் தரகர் சங்கம்மூலம் நிர்வாகம் செய்யப்பட்டது. பின் 1904 ஆம் ஆண்டளவில் பங்கு தரகர் சங்கம் கொழும்பு பங்குத்தரகர் என மாற்றப்பட்டு லண்டன் பங்குச்சந்தை சட்டக் கோவையை அடிப்படையாக வைத்து அதன் தொழிற்பாடுகள் அமைந்தன.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இறப்பர் விலை அதிகரித்தது. இதனால், அதைக் கருத்திற்கொண்டு பொதுக் கம்பனி பங்கு வழங்கல் மூலம் பணம் திரட்டி, இறப்பர், தேயிலையைப் பயிரிடல் மேற்கொண்டதுடன் இலங்கை சுதந்திரம் அடையமுன் கொழும்பு, மலேசியா, பம்பாய், சிங்கப்பூர், லண்டன் போன்ற நகரகளில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் சுதந்திரமாகக் காணப்பட்டன. இவற்றில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட 25 கம்பனிகளில் 5 கம்பனிகள் மாத்திரமே இறப்பர் பயிர்ச் செய்கையில் இருந்து ஒயில்பாம் உற்பத்திக்கு மாற்றப்பட்டு இயங்குகின்றன. மிகுதி கம்பனிகள் யாவும் கலைக்கப்பட்டுள்ளன.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர மடைந்ததுடன், அந்நிய நாட்டு பங்குச்சந்தை சுதந்திரம் பறிக்கப்பட்டு இருந்த கம்பனிகள் அனைத்தும் ரூபாய் கம்பனிகளாக மாற்றப் பட்டன. இதன்படி 140 கம்பனிகள் ரூபாய் கம்பனிகளாக மாற்றப்பட்டன. இவற்றுள் 121 கம்பனிகள் பெருந்தோட்டக் கம்பனிகளாகும்.

1948 - 1977 ஆம் ஆண்டில் இலங்கைப் பங்குச்சந்தை

இந்தக் காலகட்டத்தில் இலங்கைப் பங்குச் சந்தை பெரிதும் வளர்ச்சியடையவில்லை.

இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. 1948 ஆம் ஆண்டு பங்குச்சந்தையில் அங்கம்வகித்த கம்பனிகள் அனைத்தும் ரூபாய் கம்பனிகளாக மாற்றப்பட்டமை.
2. இக்காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரக் கட்டுப்பாடு.
3. 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற நிறுவனக் கையேற்பு சட்டத்தின் நடவடிக்கை
4. 1975 ஆம் ஆண்டு இறுதியில் காணி

(7 ஆம் பக்கம் பார்க்க...)

புரதமும் எண்ணெய்ச்சத்தும் நிறைந்த கச்சான் (நிலக்கடலை)

நிலக்கடலையில் எண்ணைச் சத்தும், புரதமும் அதிகமாக அடங்கியுள்ளன. இந்த நிலக்கடலைமூலம் வெவ்வேறான உணவுப் பொருட்களைத் தயாரிக்க முடியும். நிலக்கடலை எண்ணை உணவுக்குத் தகுந்த மரக்கறி எண்ணையாகவும் காணப்படுகின்றது.

பச்சை நிலக்கடலை தாவர இனங்களில் லெகியுமினேசி' இனத்தைச் சேர்ந்த தாவரமதாகும். இது சிறிதாகவும், அதிகமாகவும் வளரும்.

இந்த தாவரங்களின் இலைகளின் நீளம் 4 - 8 சென்ரி மீற்றர் வரையாகும். இலைகளின் நுனி கூராகவும், நீளமாகவும் காணப்படும்.

இலைகளின் நரம்பு மிக மென்மையாக இருப்பதோடு, அவை சாதாரணமாக வளர்ந்திருப்பதைக் காணலாம்.

நிலக்கடலைச் செடியின் வேர்கள் நன்றாக வளர்ந்து 10 சென்ரி மீற்றர் ஆழத்திற்கு நிலத்தில் உள்ளே இருப்பதை காணலாம். செடியில் பூக்கும் பூக்கள் தனித்தனியாகவும், கொத்துக் கொத்தாகவும் மஞ்சள் நிறத்தைக் கொண்டதாகவும் காணப்படும்.

இந்த செடியின் பூக்கள், பூக்கும் ஆரம்பத்தில் அதன் அரும்பு 4 சென்ரி மீற்றர் நீளத்துக்கு வளரும். அத்தோடு இதன் விதைகள் கோதினால் மூடி இருப்பதைக் காணலாம். சிவப்பு, சொக்லேட் நிறம், சிலவேளை நாவல் நிறமோ அல்லது கறுப்பாகவும் விதைகளின் நிறங்கள் காணப்படும்.

வகைகள்

ரெட்ஸ்பெனிஷ்

இது நாட்டுக்கு மிக உபயோகமானதோடு உயர்ந்த விளைச்சலையும் பெற்றுத்தரும்.

m-1-1 இதுவும் மிக உபயோகமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்ந்த விளைச்சலையும் பெற்றுத் தரும்.

உயர்ந்த விளைச்சலை பெற்றுத் தரும்.

m1-1க்கு சமமாகும்.

x-14 உயர்ந்த விளைச்சலைப் பெற்றுத் தரும்.

இந்த வகைகள் புதர்களாக வளருவதோடு மற்றும் பரந்து வளருவதாகவும் காணப்படும்.

காலநிலை

நிலக்கடலை உற்பத்திக்கு உதாரணமாகச் சூரிய ஒளி தேவைப்படும் அல்லது இதற்கு சமமான உஷ்ண கால நிலை தேவைப்படுகின்றது. உலர்வலய பிரதேசத்தில்வெளி விவசாயமாகப் பெரும் போகத்தில் உற்பத்தி செய்ய மிக உகந்ததாகும். உலர் வலயப் பிரதேசத்தில் சிறு போகத்தில் நீர் விநியோகத்தினால் நன்றாக உற்பத்தி செய்யலாம்.

மண்ணை ஒழுங்கு செய்தல்

18 - 20 சென்ரி மீற்றர் ஆழத்திற்கு மண்ணை வெட்டிப் புரட்டி மண்கட்டிகளை உடைத்து, மண்ணை ஒழுங்கு செய்யவேண்டும்.

பின்பு பாத்திகளைத் தயாரித்து அல்லது உயர்ந்த இடங்களில் விதைக்கலாம்.

உற்பத்தி செய்யும் காலம்

பெரும் போகத்தில் ஐப்பசி மாதம் இரண்டாவது வாரத்தில் இருந்து கார்த்திகை மாத முதல் வாரம் வரையும், சிறு போகத்தில் சித்திரை மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து, வைகாசி மாதம் முதல் வாரம் வரையும் விதைக்க முடியும்.

இங்கு கோதுகள் உடைத்த விதைகளைப் பயிரிடவேண்டும். ஒரு ஹெக்டயர் உற்பத்தி செய்வதற்குக் கோதுகளை நீக்கிய விதைகள் 70 கிலோ கிராம் அளவு தேவைப்படும்.

பாதிக்கும் கிருமிகள்	பாதிப்பின் அறிகுறிகள்	தடுக்கும் முறை
நிலக்கடலை இலைகள் ஓட்டையாக்கும் மயிர்க்கொட்டி	1. இலைகளை ஓட்டையாக்குதல். 2. இலைகளைச் சாப்பிடுதல். 3. கச்சான் கோதுக்குப் பாதிப்பு ஏற்படுத்தல்.	செடியைச் சுற்றி மண் போடுதல். இலைகளின் பின் புறத்திற்கு கிருமிநாசினிகளைப் போடுதல்.
கோதுகளை ஓட்டையாக்கும் மயிர்க் கொட்டி	1. சாற்றை உறிஞ்சிக் குடித்தல். 2. வைரஸாக செயல்படுதல்.	தகுந்த கிருமிநாசினிகளை வழங்குதல்.

நோய்	காரணம்	நோயின் அறிகுறி	தடுக்கும் முறை
பச்சைப் புள்ளி விழுதல்.	சர்கஸ் போரா பர்ய நேட்டா பங்கஸ்	இலைகளின் சிவப்பு சொக்லேட் நிறப் புள்ளி விழுதல்.	பங்கஸ் நாசினியை வழங்குதல்.
கறை பிடிக்கும் நோய்.	புக்சீணிலா அரகிட்ஸ் பங்கஸ்	இலைகள் காயந்து போவது, வேர் அழுகுதல்.	கன்றுகளைப் பிடுங்கி நீக்குதல்.
செடியின் அங்கங்கள் வாடுவது.	றைபன் டோனியா சொலனை	முழுக் கன்றும் வாடிப்போகுதல்.	கிருமிநாசினிகள் வழங்குதல்.
செடியின் அடி அழுகுதல்.	ஸ்க்லெரோமியம்	கன்றுகள் அழிதல்.	பங்கஸ் நாசினி வழங்குதல்.

உரம் பாவித்தல்

நிலக்கடலை உற்பத்தியின்போது NPK 6,25,28 அளவுகளுடன் கலந்து ஒரு ஹெகடயருக்கு 200 கிலோகிராம் உரம் போடவேண்டும்.

முதன் முதலாகப் பூ பூக்கும் வேளையில் யூரியா ஒரு ஹெக்டயருக்கு 25 கிலோ கிராம் போடவேண்டும். செடி இருக்கும் இடத்தில் இருந்து 100 சென்ரி மீற்றர் தூரத்தில் உரம் போடுவது மிக நல்லது.

நீர் விநியோகம்

பெரும்போகத்தில் உற்பத்தி செய்யப்படும்போது வறண்ட காலநிலை இருந்தால் நீர் விநியோகிக்க வேண்டும். முதல் மூன்று வாரங்களுக்குள் 4 நாள்களுக்கு ஒரு தடவையும், பின்பு வாரத்திற்கு ஒரு தடவையும் நீர் விநியோகிக்க வேண்டும்.

பூப்பூக்கும் போதும் கச்சான் மேற்பட்டை உருவாகும் போதும் ஈரத்தன்மை மிகவும் அத்தியாவசியமாகும்.

களைகளைத் தடுக்கும் முறை

முதல் வளர்ச்சியின்போது புற்களை நீக்குவது மிக அவசியமாகும். பயிரிடும்போது மண்ணில் ஈரத்தன்மை

இருந்தால், களை நாசினி ஒன்றை உபயோகிக்கலாம்.

பயிரிட்டு மூன்று வாரத்தின் பின் கையால் புற்களை நீக்கவேண்டும். கச்சான் மேற்பட்டை உருவாகும்போது களைகளை நீக்குவது உகந்ததல்ல. பூப்பூக்கும்போது, மண்ணை மென்மையாக்கிக் கொள்ளவேண்டும். இதை 35 நாட்கள் செய்யவேண்டும்.

விளைச்சலைப் பெறுதலும் தயாரித்தலும்

மூன்று, நான்கு மாதம் சென்ற பின்னர் விளைச்சலைப் பெறுவதற்குச் செடியைப் பிடுங்கி விடலாம். கச்சான் முற்றும் அறிகுறியாக இலைகள் மஞ்சள் நிறமாவதுடன், காய்ந்துபோவது மற்றும் இலையில் பின்புறம் கோடுகள் விழுவதையும் காணலாம்.

முற்றிய கோதினைக் கைகளால் உடைத்து வேறாக்குவது சுலபமானது. விதைகள் நன்றாக வளர்ந்திருக்கும். கச்சான் கோதில் உட்புறம் பச்சை நிறமாகக் காணப்படும் போது விளைச்சலைப் பெறுவதற்கு உற்பத்தி தகுந்த நிலையில் உள்ளதைக் காணலாம்.

பிடுங்கிய செடிகளை வெய்யிலில் காயவைத்து விதைகளை வேறாக்கிக்கொள்ள வேண்டும். அதற்குப் பின்பு விதைகளைக் காயவைத்து 9 விகிதம் வரை ஈரத்தன்மையைக் குறைத்து, தகுந்த காற்றுள்ள குளிர்மையான இடத்தில் களஞ்சியப்படுத்தலாம். நீர் விநியோகத்தினால் ஒரு ஹெக்டேயருக்கு விதைகள் 2000 கிலோகிராமும், மழை நீரினால் ஹெக்டேயர் ஒன்றுக்கு 800 - 1200 கிலோகிராம் வரை விளைச்சலைப் பெறலாம்.

சசி சந்திரதாசன்

(இலங்கையின்... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சீர்திருத்த சட்டம் மூலம் பெரும்தோட்டம் அரசுடமையாக்கப்பட்டது.

5. இதனால் 1976 ஆம் ஆண்டு பட்டியலிட்ட கம்பனிகள் 76 ஆக வீழ்ச்சியடைந்தது.

1977 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலத்தில்

இந்தக் காலகட்டத்தில் பங்குச்சந்தை மீளப் புத்துயிர் பெற்றுக் காணப்பட்டது. இதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. அரசினால் பொறுப்பேற்ற கம்பனிக்கு 10 % வட்டியுடன் நட்டஈட்டுக்கொடுப்பனவு வழங்கப்பட்டமை.
2. அரசதுறை தனியார் துறை இருவரும் பங்குச்சந்தையில் ஈடுபட திறந்த பொருளாதாரம் வழியமைத்தமை.

இவற்றினூடாக 1984 - 7 - 2 ஆம் திகதி பங்குச்சந்தையில் முக்கிய நிகழ்வாக ஓர் அறையில் இடம்பெற்ற சந்தை நடவடிக்கைகள் - நாட்டு மக்கள் அனைவருக்கும் அளிக்கும் வகையில் பகிரங்க வியாபார தளமொன்றின்மூலம் பங்குக் கைமாற்றம் இடம்பெற வாய்ப்பாக அமைந்தது.

1948 - ஓகஸ்ட் மாதம் கொழும்பு தரகர் சங்கத்திற்கு போட்டியான மற்றும் ஓர் பங்குத்தரகர் நிறுவனம் உருவாக்கப்பட்டதால் மக்களிடம் அதுபற்றிய பூரண அறிவின்மையால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியது. இதன்காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிபாரிசில் 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி கொழும்பு பங்குத்தரகர் சங்கமும், பங்குத்தரகர் சங்கமும் ஒன்றிணைக்கப்பட்டு கொழும்பு பிணைகள் பரிமாற்று நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே பங்குச்சந்தையில் இரண்டாம் தர பங்குசந்தை ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை திறந்த சந்தை முறையில் பங்கு கைமாற்றப்படும். பங்குச் சந்தையில் முக்கிய தடயமாக 1997 ஜூன் மாதம் கொழும்பு பங்குச் சந்தை தன்னியக்க கணினி மயப்படுத்தப்பட்டது.

1. பௌதீக ரீதியான விளம்பரம்.
2. தரகர்களின் மூலம் இடம் பெறும் திறந்த கற்றல்முறை. ஆகியன பிற்பற்றப்படாமல் நடைபெறுவதுடன், இதனூடாக பின்வரும் அனுகூலங்களும் பெறப்படுகிறது.

1. உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தகவல்களை இலகுவாக அமையலாம்.
2. நாடு முழுவதும் பங்குச் சந்தை விளம்பரம் இடம் பெறுகிறது.
3. தரகர்கள் வியாபாரத் தளத்தைச் சந்திக்க வேண்டிய தில்லை.

(தொடரும்...)

தொழில் வங்கி

நிறுவனம்	வெற்றிடமாகவுள்ள பதவிகள்	அடிப்படைத் தகுதி	முடிவு திகதி
பெருந்தோட்ட அமைச்சு	விவசாயப் பொருளியலாளர்	விவசாயப் பொருளாதாரம்/ அபிவிருத்திப் பொருளாதாரத்தில் பட்டப்பின் படிப்பு. 5 வருட அனுபவம் வயதெல்லை 60 வருடங்கள்	15.06.2004
யுனிசெவ்	உதவி நிர்வாக நிதி அலுவலர்	வர்த்தக முகாமைத்துவ அல்லது அவை சார்ந்த துறையில் பட்டதாரி. 2 வருட அனுபவம்	19.06.2004
சிறுவர் பாதுகாப்பு அமைப்பு	திட்ட அபிவிருத்தி அலுவலர்	சமூகவிஞ்ஞானம் / கல்விமாணி அல்லது அவை சார்ந்ததுறையில் பட்டதாரி. 3 வருட அனுபவம் கணினி அறிவு	10.06.2004

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

ஊடகவியலாளரின் நினைவாக

செந்தணன்

மக்களின் உரிமைகளை வெளிப்படுத்த எழுத்தாணி தூக்கிய நடேசன்



ஓர் ஜனநாயக நாட்டில் ஊடகம் எனபது அத்தியாவசியமானது. அதிலும் உண்மையைத் துணிவுடன் வெளிபபடுத்தும் ஊடகவியலாளர்கள் அந்த ஊடகங்களில் பணியாற்றவேண்டும். சர்வாதிகாரமும், ஆதிக்க வெறியும் கொண்ட ஆட்சியாளர்கள் நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றியிருக்கும் நாட்டில் ஊடகமும், ஊடகச்சுதந்திரமும் நிலைத்திருக்கமுடியாது. அத்தகையதோர் நிலைப்பாட்டில் இலங்கை இருப்பதையே,ஊடகவியலாளர் வி.நடேசனின் கொலை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

இருபது வருடங்களுக்கும் மேலாக ஊடக அனுபவம் கொண்ட ஓர் ஜனநாயக வாதிக்கு திங்கள் காலை பட்டப்பகலில் நட்டநடு வீதியில் பாதகம் ஒன்று நடந்திருக்கின்றது.

கொலை செய்யப்பட்டவர் ஜி.நடேசன் உலகமறிந்த பத்திரிகையாளர் என்று தெரிந்தும் உடலிலிருந்து இரத்தம் வெளியேறி உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த வேளையில் நாவறண்டு உதவி கோரியவேளையிலும், எவரும் அவரைக்காப்பாற்ற நினைக்கவில்லை. இது வடக்கு - கிழக்கிலுள்ள ஊடகவியலாளர் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் தமது கடமை மீதான நம்பிக்கையில் பெரும் ஜயத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

தேசவிரோத சக்திகளால் தமிழ் உரிமைக்காக குரல் கொடுத்த தமிழ ஊடகவியலாளரான நிமலராஜன் கொலை செய்யப்பட்டு தமிழ் ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டுப் போட நினைத்தவர்களின் விசாரணைகளே இன்னும் முடியவில்லை. அந்த வேளையில் மட்டக்களப்பில் இன்னுமோர் நேர்மையான பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டிருப்பது தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயலாகும்.

உலகமெங்கும் நடக்கும் அநீதிகளை, சிரமங்கள் மத்தியிலும் வெளிப்படுத்தி மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துச் செயற்படுபவனே உண்மையான ஊடகவியலாளனாவான். அரச அதிகாரிகளானாலும், சரி, அரச திணைக்களங்களானாலும சரி, அரசியல் தலைவர்களானாலும் சரி பொதுமக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் செயற்படுவோரை வெளி உலகுக்கு அடையாளப்படுத்தும் மிகுந்த கடினமான பணியை ஆற்றுபவன் ஊடகவியலாளன் ஆவான்.

குறிப்பிட்ட ஒரு சிறுதொகைப் பணத்தைக் கொடுத்து பத்திரிகை வாங்கிப் படிப்பவர்களுக்கோ அல்லது வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் (இன்டர்நெட்) போன்றவற்றின் மூலம் செய்திகளை அறிந்து கொள்பவர்களுக்கோ, செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊடக வியலாளன் ஒருவன் படும் கஷ்டங்கள் பெரிதாகத் தெரிந்திருக்காது.

மழை, வெயில், அதிகாரிகளின் அசசுறுத்தல்கள், ஆபத்தான பயமுறுத்தல்கள், என்பவற்றையெல்லாம தாங்கி அவற்றையெல்லாம் எதிர்கொண்டே ஒரு செய்தியை செய்தியாளன் வெளிப்படுத்துகின்றான்.

எத்தனையோ ஊடகவியலாளர்களின் ஒட்டுமொத்த வியர்வைத் துளிகளின் பயனாகவே ஒரு பத்திரிகையோ அல்லது செய்தித் தொகுப்போ வெளிவருகிறது. அவ்வாறு எம்மோடு தோள் கொடுத்து இலங்கையில் நடந்த நடகும் நடக்கப்போகும் அநீதிகளை வெளிப்படுத்தி வாழ்ந்த நடேசன் வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொலைஞர்கள் ஒன்றை நினைகவில்லை எழுதும் கரங்களுக்கு வலுச்சேர்ப்பதோடு எழுத்தாணிகளின் வேகத்தையும் இத்தகைய ஊடகவியலாளர் கொலைகள் அதிகரித்து புத்தூக்கம் கொடுக்கும் என்பதை அவர்கள் உணரவில்லை. வீழ, விழ எழும மறவர்கள் போல் பத்திரிகையாளர்களும் விழிப்படைவர், எழுவர், எழுதுவர். உலகில் எழுத்தாணியின் சக்திக்கு நிகராக எதுவும் இல்லை. இந்த உண்மை தெரியாத மூடர் ஓர் பயனுள்ள நியாயவாதியைக் கொலை செய்துவிட்டனர்.

எழுதும் கரங்களைக் கைகோர்க்கச் செய்வதுடன், வலுப்படுத்தி இன வெறியரின் அடாவடியை மேலும் வெளிப்படுத்த, உலகமெங்கும் அடாவடி நடவடிக்கைகளைப் பறைசாற்ற சந்தாப்பம் உருவாக்கப்படடிருக்கின்றது.

வாழ்வென்பது எல்லோருக்கும் சிறிது காலம் வரைதான் அதில் நடேசன் பலவற்றைச் சாதித்திருக்கின்றார். அவரது குரல் மூலம் பல உணமைகளை உலகிலுள்ள அனைத்துத் தமிழர்களும் கேட்கும் வண்ணம், வானொலிமூலம் தவழச் செய்தவர். எழுத்தாணி மூலம் பல கட்டுரைகளையும், செய்திகளையும் வெளிபபடுத்தியவர். இன்று தமிழ்ப் பற்றோடு நாட்டுப்பற்றாளனாக மரணித்துள்ளார். இனவெறியாளர்களும், தமிழின விரோதிகளும் ஒன்றுபடலாம். ஊடகவியலாளர்களை துன்புறுத்தலாம். அவை ஏற்படுத்தப் போகும் பாதிப்புக்கள் வெகு விரைவிலேயே அவர்களுக்குத் தெரிய வரும். நியாயமும், தர்மமும் உறங்காது உண்மைகள் வெளிப் படும் போது கொலைஞர்கள் வாழ்வர் என்பது கேள்விக்குள்ளாகும் விடயமாகும். ஏனெனில் தமிழர் காவலன் ஒருவன் இருக்கின்றான். அவன் அறியாமல் எதுவுமில்லை. அவன் தீர்ப்பைப் பெறவேண்டிய கட்டாயத்தில் கொலைஞர்கள் உள்ளனர்.

நடேசனின் இறுதி ஊர்வலம் இன்று யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெறவுள்ளது. எமகாக உயிர்துறந்த அந்த நாட்டுப் பற்றாளனை கௌரவித்து எமது இறுதி அஞ்சலியைச் செலுத்த அனைவரும் ஒன்று திரளவேண்டும். யாழ். வீரசிங்கம் மண்டபத்திலிருந்து இன்று காலை ஆரம்பிக்கும் நடேசனின் இறுதி ஊர்வலம் மானிப்பாய். மருதனார் மடம், சுன்னாகம், புத்தூர், அச்சுவேலி, நெல்லியடி என நீண்ட தூரவாகன பவனியாய் இடம்பெறவுள்ளது.அந்த வேளை சிறுமலர்க் காணிக்கையாவது நாம் செய்து எமது மனதை ஆற்றிக்கொள்ள வேண்டும்.

உண்மைகளை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர் இருக்கும் வரைதான் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.அத்தகைய ஊடகவியலாளர களைப்பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு பொது மக்களிடமே உணடு. உண்மைகளை வெளிப்படுத்த முற்பட்ட போதெல்லாம் பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இத்தகைய கொலைகள் மேலும் தொடர்ந்தால் அது ஜனநாய கத்துக்கும், உண்மைக்கும் மட்டும் ஆபத்தல்ல. தமிழ் மக்களின் வாழ்வியல் சுதந்திரத்துக்கே ஆபத்தாகிவிடும்.எனவே, தமிழ்மக்கள் தமது நியாயமான உரிமைகளைக்காக்க ஊடக வியலாளர்களாகிய உங்கள் நண்பர்களை நீங்களே காக்கவேண்டும். ஊடகவியலாளர்களின் மரணம் தமிழ் உணாவுகளுக்கான குரல் வளைகளை நசுக்கும் முயற்சியாகும். இதனைத் தொடர்வதற்கு மக்கள் என்றும் அனுமதிக்கக்கூடாது.

செய்திக் கட்டுரை

பட்டனைந்து

குருநகர்ப் பிரதேசத்தை பெருநகராக்கும் திட்டங்கள்

யாழ். நகரின் இதயம் என வர்ணிக்கப்படுகின்ற குருநகர் பிரதேசம் சனநெருக்கடி மிகுந்த இடமாக விளங்குகிறது. அதே வேளை நடந்தேறிய யுத்தத்தினால் வேறெந்தப்பகுதியும் அடைந்திராத அளவு சேதசங்கள் ஏற்பட்ட பகுதியும் இது தான்.

யுத்தம் ஒன்று நடந்திராவிட்டால் பெரியகடை என கூறப்பட்டு வந்த யாழ்.நகரமையப் பகுதியும், சின்னக்கடை என வழங்கப்பட்ட குருநகர் புறநகர்ப் பகுதியும் பல விதத்திலும் முன்னேற்றங்களைக் கண்டிருக்கும்.

இராணுவ முகாம்கள் குருநகர் தொடர் மாடியிலும், பின்பாக யாழ் கோட்டையிலும் அமைந்திருந்ததனால் வட பகுதியின் கேந்திர நகரங்களான இவ்விரு பகுதிகளும் சேதங்களுக்கு உள்ளாகின.

இந்தக் காலகட்டங்களிலேயே திருநெல்வேலி வர்த்தக நடவடிக்கைகளுக்கு கேந்திர இடமாக மாறியது. அதனைத்தொடர்ந்து குட்டிக் குட்டி நகரங்களான மானிப்பாய், நெல்லியடி போன்ற வளர்ச்சி கண்டன. அதே நேரம் சுன்னாகப் பகுதியும் பண்டத்தரிபு சந்தையும் சீர்குலைந்து போயிருந்தன.

யுத்தத்தினால் சீரழிந்து காணப்படும் குருநகர் பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுத்தாலே முடியும்.குருநகரின் கடற்கரையை அண்டிய பகுதியில் 200 இக்கும் மேற் பட்ட வீடுகள் அதியுயர் பாதுகாப்பு வலயவேலிகளுக்குள் அகப்பட்டுள்ளன. அவை அனைத்தும் படையினரின் விறகுத் தேவைகளுக்காக நாசமாக்கப்பட்டுள்ளன.

அந்தக் குடிமனைகளில் இருந்த கூரைத் தகடுகளை மறைப்பு வேலிகளுகுப் பயன்படுத்திய இராணுவம் மரங்கள், கதவுகள், யன்னல்கள், நிலைகள், அனைத்தையும் விறகுத் தேவைக்காக கொத்தி எடுத்து எரித்து விட்டது.

இப்பொழுது சுவர்களோடு அந்த வீடுகள் மூழி அலங்காரியாகக் காணபடுகின்றன. இவை தவிர்ந்த பகுதிகளில் விமானக் குண்டு, எறிகணைத் தாக்குதல்களால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்து இருந்தன.

அவற்றில் குடியேறியுள்ள மக்கள் சிறுகச்சிறுக மறைப்பு வேலைகளைச் செய்து கொண்டு வாழ்ந்த போதும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையால் ஒரு சீரற்ற வாழ்வையே சீரணித்துக் கொண்டு இருக்கின்றனர்.

வீதிகள் சேதங்கள்

இந்தப் பகுதியில் அமைந்துள்ள தண்ணீர்த் தாங்கி 4 ஆம் குறுக்குத் தெரு, கடற்கரை வீதியின் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் குறுக்கு வீதிகள், பால உடையார் வீதி, சென். செபஸ்ரியன் வீதி, பாங்ஷால் வீதி இதில் 1 ஆம் குறுக்கு வீதியில் இருந்து சென்.பற்றிக்ஸ் வீதி வரையான பகுதிகள், சின்னக்கடை 4 ஆம் குறுக்குத் தெரு, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி, கடற்கரை வீதி, ஜஸ்பிளான்ட் வீதி, மத்திய கிழக்கு வீதியில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4ஆம், குறுக்கின் இருபக்க வீதிகளும், அடப்பன் வீதி ஆகிய 20 இற்கும் மேற்பட்ட வீதிகள பாவனைக்கு உதவாத அளவுக்கு சேதமடைந்துள்ளன.

சேதமடைந்துள்ள மதகுகள்.

கடற்கரை வீதியும், மவுண் கார் மேல் வீதியும், சந்திக்கும் முக்கிய சநதி மதகு, கடற்கரை வீதியின் 2ஆம,3ஆம் குறுக்கு வீதிகளில் அமைநதுள்ள மதகுகள்,குருநகர் 1ஆம் குறுக்கு வீதி, மற்றும் மத்திய கிழக்கு 1 ஆம் குறுக்கு வீதி ஆகிய வறறில் அமைந்துள்ள மதகுகள் பழுதடைந்து பல வருடங்களாகின்றன.

தண்ணீர்த் தாங்கி அகற்றல

இவற்றை நடைமுறைப்படுத்த குருநகர், முன்னேற்ற ஜக்கிய முன்னணி யாழ்.மாநகரசபையிடம் சமர்ப்பித்துள்ளது.

1. வீதியோரக் குப்பைகூழங்களை அகற்றி, வீடுகளில் நாளாந் தம கழிவுப் பொருள்களை சேகரிக்கக் கூடிய வாகன ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தல்.

2. நாளாந்தம் வடிகால்களைத் துப்பரவு செய்தும், இராணுவக்கட்டுப் பாட்டிலுள்ள வடிகால்களையும் சீரமைத்தல்.

3. கட்டட இடிபாடுகளையும், கழிவுப பொருட்களையும் உடனுக்குடன வீதியோரங்களிலிருந்து அகற்றுதல்,

4 வீடுகளில் நிறைந்த போகும் மலக்குழிகளில் இருந்து கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்கு நடைமுறையினை ஏற்படுத்தல்.

5. கடலுணவு பதனிடும் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப் படும் கழிவு நீர் வழிந்தோடக் கூடிய தாக அப்புறப்படுத்தத்தக்க வகையில திட்டமிட்ட முறை வடிகால்களை அமைத்தல்.

திருத்தப்பட வேண்டிய வடிகால்கள்.

இந்தப் பகுதியில் இருபதுக்கும் மேற்பட்ட வடிகால்கள் திருத்தப்பட வேண்டிய நிலையில் காணப்படுகினறன. அவையாவன -

1. புதிய கடற்கரை வீதிக்கும், 1ஆம் குறுக்குத் தெரு, தண்ணீர்த் தாங்கி வீதிக்கும் இடைப்பட்ட வடிகால்.

2. தண்ணீர்த் தாங்கி 2ஆம், 3 ஆம், குறுக்குத் தெருக்களில் அமைநதுள்ள வடிகால்கள்,

3. மத்திய கிழக்கு வீதியின் வடக்குப் பக்கமாக 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகளில் அமைந்துள்ள வடிகால்கள்.

4. தண்ணீர்த்தாங்கி வீதியின் கிழக்குப் பக்க ஒழுங்கை வடிகால்.

5. அடப்பன் வீதி கிழக்குப் புற ஒழுங்கை வடிகால்.

6. சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி வடிகால்.

7. ரெயில்வே வீதி (பிரதான வீதி - பாங்ஷால்) வீதியிடையுள்ள வடிகால்.

8. ஓடைக்கரை வீதி வடிகால்.

9. அடப்பன் வீதி (6.ஆம் குறுக்கு வீதி - ஓடைக்கரை வீதி இடை யுள்ள) வடிகால்.

10. பால உடையார் வீதி மற்றும் அடப்பன் வீதி, 1 ஆம், 2ஆம் ஒழுங்கை, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, சென்.செபஸ்ரியன் வீதி, கொட்டடி வீதி, சின்னக்கடை வீதி, சென் ஜேம்ஸ் மேற்கு, கிழக்கு வீதிகள், புதுமைமாதா கோவில் மேற்கு வீதி, கடற்கரை வீதி, 1ஆம் குறுக்குத் தெரு, புதிய பூங்கா வீதி, புதிய வீடமைப்புத் திட்ட வீதி ஆகிய வற்றில் அமைந்துள்ள வடிகால்கள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில இருக்கின்றன.

சுகாதார வீடயங்கள்.

நெருக்கடியான குடியிருப்புக்களைக் கொண்ட பகுதியாக குருநகர் இருப்பதால் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதாரத் தேவைகளாக இனம் காணப்படுவன.

1. நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும், தொற்று நோய்கள, பரவுவதை தடுப்பதற்கும் ஏற்ற வகையில் தடுப்பு மருந்துகளை விசிற நடவடிக்கை எடுத்தல்.

2. பொது சுகாதார அதிகாரியின் தலைமையில் சுகாதார விடயங்களை மாதாந்த ஒன்று கூடல் மூலம் தீர்த்து வைப்பதற்கான கலந்துரையாடல் களை நடத்துதல்.

3. குழந்தைகளின் போஷாக்கினை போணுவதற்கு இலவச சத்துணவுத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி (குறிப்பாக பாலர் இலவச பால் மா வழங்கல்) மூலமாக உதவுதல்.

4. குருநகர் மீன்வாடி, குருநகர் பொதுச்சந்தை என்பவற்றை நாளாந்தம் காலை,மாலை துப்புரவு செய்து கழிவுகளை உடனுக்குடன் அகற்ற நடவடிக்கை செய்தல்.

5. தொடர்மாடிப் பகுதியில் அமைந்துள்ள மலசலகூடங்களை புனரமைக்கவும்,துப்பரவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

6. பொது இடங்களையும், ஆலயங்களின் சுற்றாடல்களையும், வீதிகளையும் நாளாந்தம் சுகாதார ஊழியரகளைக் கொண்டு கூட்டிப் பெருக்குதல் போன்ற சுகாதார சேவைகள் இந்தப்பகுதிக்கு அத்தியாவசியமானது என்பது சுட்டிக் காட்டப்படுகிறது.

குடிநீர், சுற்றுச் சூழல் அபிவிருத்தி

மேலும் குடிநீர், சுற்றுச்சூழல் அபிவிருத்தி பற்றி கூறக்கூடியதாக இருப்பவை -

1. நெருக்கடியான குடியிருப்புக்களுள்ள வீதிகளில் மேலதிக நீர் விநியோகக் குழாய்களை நிறுவி குடிநீர் விநியோகத்தினை விஸ்தரித்தல்.

2. குடிநீர் விநியோகிக்கும் நேரத்தினை அதிகரித்தல்.

3. தற்போது தடைசெய்துள்ள குடிநீர் குழாய்களைத் திறந்து நீர் விநியோகித்தல்.

4. ஜஸ்பிளான்ட் வீதியில் கடல் நீரேரிப் பகுதியில் குப்பை போட்டு நிரப்பப்பட்ட இத்தைப் பொது மைதானமாகப் பிரகடனப்படுத்தி அத்துமீறிக் குடியிருக்க எத்தனிப்பவர்களைத் தவிர்க்கும் வகையில் அறிவித்தல் பலகையை நாட்டுவதுடன், மீதியாக நிரப்புவதற்கு இருக்கும் பகுதியையும் குப்பைகளைப் போட்டு நிரம்பச செய்தல்.

5.பிரதான வீதியின் தெற்காக மவுணகார் மேல் வீதியின் மேற்குப் புற மூலையிலும் தொடர்மாடிப் பகுதியிலும், கடற்கரை வீதியில் சனசமுக நிலையப் பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் ஆவன செய்தல். **தொடரும்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.

சிந்தனைக்கு

குடிபுறங் காத்து ஓம்பி குற்றம் படிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

திருக்குறள்

நமது நோக்கு

தடுமாறும் ஜனாதிபதி; தள்ளாடும் சமாதானம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு சர்வதேச சமூகத்திடம் இருந்து நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதில் காட்டும கரிசனையின் அளவுக்கு சமாதான முன்னெடுப்புக்களை மேற் கொள்வதற்கான செயற்பாடுகளில் ஆர்வம் காட்டவில்லை.

-இது உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் அரசியறதுறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தியுள்ள விடயமாகும்.

-உண்மையில் சமாதானம் குறித்து இலங்கையரசின் அரசி யல் யதார்த்த நிலையும் இதுவேயாகும். இதனைப் புதிய அரசு பொறுப்பேற்ற ஐம்பது நாட் செயற்பாடுகள் தெளிவாக நிரூ பித்துள்ளன.

-இரு தசாப்தகால யுத்தத்தில் தேசத்தின் வளங்கள் அனைத்தையும் செலவிட்டு நாட்டின் அழிவுக்கே வித்திட்ட இலங்கையின் கடந்தகால மற்றும் சமகால ஆட்சியாளர்களின் தீர்க்கதரிசன நோக்கற்ற - தேசிய நலன்களைப் புறக்கணித்த - செயற்பாடுகள் அனைத்தும் எதிர்காலத் தலைமுறையினரின் வாழ்க்கைக்கான உத்தரவாதத்தை உறுதி செய்யமுடியாத நிலை உருவாகக் காரணமாகிவிட்டது.

-நாட்டின் அதிமுக்கிய பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண எடுத்த முட்டாள்தனமான முடிவுகளே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலாதாரமாகியும் விட்டது.

-சுதந்திரத்திற்குப் பின்னரான அரை நூற்றாண்டு கால ஆட்சியியல் நடைமுறைகளில் ஜனநாயகம், தனிமனித சுதந்தி ரம், இனங்களுக்கிடையேயான ஒருமைப்பாடு மற்றும் தேசிய உணர்வு ஆகிய அனைத்து முக்கிய அம்சங்களையும் கேள்விக் குரியதாக மாற்றிய பெருமை பேரினவாத சிந்தனை கொண்ட தென்பகுதித் தலைமைகளையே சாரும்.

-அந்த அளவுக்கு அவர்களின் அரசியல் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாக இருக்கவில்லை.

-1958 இன் பின் வேகங்கொள்ளத் தொடங்கிய இன முரண் பாடுகளின் வளர்ச்சியானது ஆட்சி, மாற மாற நெருக்கடி நிலை யை அதிகரிக்க உதவியதேயன்றி பிரச்சினைகக்கு தீர்வு காணும நோக்கில் எந்தவிதமான வழிவகைகளையும் நியாயமாக - நேர்மையாக - தேடவேண்டிய அவசியம் குறித்து ஆட்சியாளரை சிந்திக்க வைக்கவில்லை என்பதுதான் கவலைக்குரிய விடயமா கும்.

-இந்தத் தொலைநோக்குத்திறன் இவர்களிடம் இல்லாமல் போனதற்கு இனப்பிரச்சினையை தமது அரசியல் நகர்வுகளின் இயக்கமையமாக இவர்கள் முதன்மைப்படுத்த முயன்றமையே காரணமாகும்.

-இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் மிகச்சுலபமாகவும், சிக்கலின்றியும் நிலையான நீதியான தீர்வொன்றை எட்டுவதற்குக் கிடைத்த கால வாய்ப்புக்களை யும் அவ்வக்காலங்களில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒவ்வொரு அரசும் நழுவவிட்டமைக்கு அவ்வக் காலங்களில் பதவிகளில் இருந்த எதிர்க்கட்சிகளே காரணமாகும்.

-இனப்பிரச்சனைக்கான தீர்வென்பதை தமது அரசியல் 'வியாபாரத்தின்' அஸ்தமனத்திற்கான அறிவிப்பு சமிக்ஞையாக சகல பேரினவாத அரசுத் தலைவர்களும் முடிவு செய்து வைத் திருந்தமையே, இன்றைய சமாதான முயற்சிகள் இவ்வளவு குறுகிய சிந்தனையுடன் கூடிய செயற்பாடுகளாக இழுபடக் கார ணமாகும்.

உண்மையில் அரசு மனிதநேயத்துடன் கூடிய, தேசிய நலனை அடிப்படையாகக் கொண்ட சமாதானத் தீர்வை இலக்கு வைத்து செயற்படுமேயானால் பிரச்சினையின் இரத்தச் சுவடுக ளையே இந்த மண்ணில் இல்லாமல் செய்துவிடமுடியும்.

அதற்கு நோர்வேயின் அனுசரணையோ, இந்தியாவின் தலையீடோ, அமெரிக்காவின் ஆலோசனையோ.... எதுவுமே தேவையில்லை.

ஆனால், அரசின் நோக்கம் அதுகிடையாது, மாறாக சமாதா னத்தின் பேரால் யுத்தநிறுத்தத்தை நீடிதது்க் கொண்டே, ஆட்சிக் காலத்தை பிரச்சினையைத் தீர்க்காமலேயே எப்படியா வது கடத்துவதுடன், அதே சமாதானத்தின் பேரால் ஆட்சியை கொண்டு செலுத்தத் தேவையான நிதிவளங்களை சர்வதேச சமூகத்திடம் ஏமாற்றிப் பெற்றுக்கொள்வதுமே அரசின் தந்தி ரோபாயமாகும்.

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதே அது இப்படித் தான் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் என ஆரூடம் தெரிவிக்கப்பட்டதற்கு அதன் கடந்தகால நேர்மையற்ற நடை முறைகளால் ஏற்பட்ட அனுபவங்களே காரணமாகும்.

-அரசு சமாதானம் பற்றிப் பேசினாலும் அதனை வலுப்ப டுத்தும் நோக்கில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எதனையும் மேற்கொளளத் தயங்குவதை வைத்துப்பார்த்தால் இறுதித் தீர்வைப்பற்றி அது பேசமுற்படுவதென்பது ஒரு 'பம்மாத்து' நடவடிக்கையாகவே உணரமுடியும்.

எனவே அரசு யதார்த்தபூர்வமாக, அந்தரங்க சுத்தியுடன் ஒரு சமாதான முயற்சியில் இறங்கும் மனோதிடமற்ற நிலையில், வெறுமனே சமாதானம் என்ற சொல்லை உச்சரிப்பதானது தமிழ் மக்களை மட்டுமல்ல சர்வதேசத்தையும் ஏமாற்றும் அதன் உள்நோக்கத்தை வெளிப்படுத்தவே செய்கின்றது.

சமாதானம்தான் நிதி வளத்தை மேம்படுத்த உதவும் ஒரே மூல மந்திரம் என்பதால் அரசு சமாதான ஓலமிடுகிறது. அவ்வளவுதான்!

பேரினவாதிகள் கிழித்த கோட்டைத் தாண்டி சமாதா னத்தை முன்னெடுக்கும் திராணி ஜனாதிபதிக்குக் கிடையாது.

எனவே தான் அவரால் அது குறித்து ஒரு தீர்க்கமான முடிவை உலக சமூகத்திற்கு உறுதியுடன் உரத்துக் கூறமுடியா துள்ளது.

நிதி தேவையானால் நீதியாக நடக்கத் துணியவேண்டும்.

நீதியற்ற முறையில் நிதியைப் பெறமுயல்வது ஒரு வரலாற் றுத் தவறாகிவிடும்.

ஜனாதிபதி இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடும் நடப்பும்



ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி முறுகலை தீர்க்க குழுவொன்றை அமைப்பதற்கு இணக்கம்!

ஜே.வி.பி கட்சிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையில் ஏற்படும் முறுகல் நிலைமையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இரு பிரதான கட்சிகளும் இணைந்து குழுவொன்றை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜே.வி.பிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகுறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்து ஜே.வி.பியினர் பேச்சுக்களை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி சார்பில் அதன் தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர், நந்தன குணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுதந்திரக் கட்சியின் சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் பங்கேற்றனர்.

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் கே.பாலபெட்ட பெந்தி ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் கலந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாடாளு மன்றில் 113 ஆசனங்களை கொண்டுவருவது குறித்து இந்தச் சந்திப்பில் ஆராய்ந்து வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்

அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மையைக் கருத்திற்கொண்டே 35 அமைச்சர்களை 37 ஆக அதிகரித்ததாகவும் தெரிவித்த ஜனாதிபதி அரசியலில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்து வதற்காகவே ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட சில விடயங்களை மாற்றவேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசு முன்னெடுத்துச் செல்லும் சமாதானப் பேச்சுக்கள் குறித்து நாட்டு மக்களுக்கு விளக்கவேண்டும் என இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் ஜே.வி.பி கோரிக்கை விடுத் துள்ளது. (01)

52 கடற்தொழிலாளர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள்

வடமராட்சி கிழக்கில் உள்ள 14 கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிகொட் நிறுவனம் 52 வெளியி ணைப்பு இயந்திரங்களை நேற்று முன்தினம் வழங்கியது.

தாளையடியில் உள்ள வடமராட்சி கிழக்கு கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிகொட் நிறுவன அதிகாரிகள் கலந்துகொண்டு இயந்திரங்களை வழங்கினர்.

தலா ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய இயந்திரங்களை 14 கடற்றொழிலாளர் சங்கங்களையும் சேர்ந்த 52 கடற்றொழிலாளர்கள் பெற்றுக்கொண்டனர். ஒவ்வொரு சமாசத்திற்கும் 30 லட்சம் ரூபாவை வழங்க நிகொட் நிறுவனம் முன்வந்து, முதற்கட்டமாக 20 லட்சம் ரூபா பெறுமதியான வெளியிணைப்பு இயந்திரங்களை நிகொட் நிறுவனம் வழங்கியுள்ளது.

கட்டுடையிலுள்ள இடிகுண்டு இடிந்து விழும் அபாயம்

கட்டுடை இடி குண்டு இடிந்து விழும் அபாயத்திலுள்ளது நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமலுள்ள இந்த இடி குண்டு கடந்த மாதம் பெய்த கடும் மழையினால் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது. இதனால் அதனை அண்டியுள்ள வீதி பாதிக்கப்படுவதுடன் அருகில் உள்ள மதில்களும் பாதிப் புக்குள்ளாகும் என வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினர், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இடி குண்டை அண்டியுள்ள வீதியால் நாளாந்தம் அனேக மானவர்கள் பயணம் செய்கின்றனர் எனவே இதனைப் புனரமைக்காவிடில் இவ் வீதியால் மேற்கொள்ளப்படும் போக்குவரத்து தடைப்படும்.

வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் போக் குவரத்தும் மிக விரைவில் இவ் வீதியால் இடம்பெற வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (91)

கிராம அலுவலர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

கிராம அலுவலர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி தத்தமது பிரிவுகளிலுள்ள சேவை தொடர்பான போக்குவரத்துக்குக் கொடுக்கப்படும் 75 ரூபாவை 500 ரூபாவாக கூட்டுவதற்கும், வெளியே சென்று கடமையாற்றுவதற்காகத் தற்போது வழங்கப்பட்டு வரும் 200 ரூபாவை ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் தங்களுடைய சேவையின் பிரச்சினை தொடர்பாக அரச நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடம் கோரியதையடுத்தே இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

மேலும்,கிராம அலுவலர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய 5 மாத கொடுப்பனவுகள் மற்றும் அலுவலக பைகளை வழங்குவதற்கும் கிராம உத்தியோகத்தர் சேவைக்காலத்திற்கு ஏற்ப தரம் உயர்த்துவது குறித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது!

சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை நுகர்வுக் கடனாக வழங்குவதற்கு இலங்கை சமூர்த்தி அதிகாரசபையின் வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்திலுள்ள சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் கடன்கள் வழங் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடனைப் பெற விண்ணப்பிக்க வேண்டுமாயின் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அத்துடன் செயற்திறன் மதிப்பீட்டில் அதிகளவான புள்ளிகளைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் கடன் விண்ணப்பதாரியிட மிருந்து 9 வீத வட்டி அறவிடப்படுவதுடன் 60 தவணைகளாக ஒரு தவணையில் 1038 ரூபா வீதம் கட்டி முடிக்க வேண்டும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 620 சமூர்த்தி அபிவிருத்தி உத் தியோகத்தர்களில் முதற்கட்டமாக 107 பேருக்கு இந்தக் கடன்களை வழங்க அதிகாரசபை தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

அரசியல் நோக்கு

- மெல்போர்னிலிருந்து சபேசன்

இடைக்காலத்தின் நிகழ்காலமும் இனப்பிரச்சினையின் எதிர்காலமும்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அம்மையாரின் தலைமையில் அமைந்துள்ள தற்போதைய அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பமாகப் போகின்றன - என்ற கேள்விக்கு, உறுதியான பதிலைப் பெற முடியாத காலகட்டம் இது!.

இந்த இழுபறி நிலைக்கான முழுப் பொறுப்பையும் - முழுப் பழியையும், சந்திரிகாவின் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். கொள்கை முரண்பாடும் கருத்து முரண்பாடும் கொண்ட கூட்டணியாக விளங்குகின்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்துத் தெளிவான, உறுதியான முடிவை எடுக்க முடியாமல் இருப்பதற்கு, இந்த கூட்டணியின் இதய சுத்தியின்மையும் ஒரு முக்கிய காரணமாகும்.

இந்தக் கூட்டணிக்குத் தலைமை தாங்குகின்ற சந்திரிகாவோ, தன்னுடைய சொந்த அரசியல் நலனுக்காக. சொந்த அரசியல் எதிர்காலத்திற்காக எத்தகைய அநீதியையும் அநியாயத்தையும் செய்யத் தயங்காதவராகவே விளங்குகிறார். அவருடைய கடந்த கால அரசியல் வரலாறும் இக்கருத்தை நிரூபித்து நிற்கிறது. இந்தப் புதிய ஆளும் கட்சிக் கூட்டணி உருவாகிய விதமும், சந்திரிகாவின் சுய நல அரசியலைத் தெளிவாகக் காட்டியுள்ளது.

1994 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில், தான் பதவியை கைப்பற்றுவதற்காக, தன்னை ஒரு சமாதானத் தேவதையாகக் காட்டிக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வைக் காண வேண்டுமென்றும், சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்றும் கூறியது சந்திரிகாதான்!. 2004 ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக சமாதானத்திற்கு எதிரான கருத்துக்களையும், சிங்கள - பௌத்த பேரினவாத சிந்தனைகளையும் வெளிப்படுத்தியதும் இதே சந்திரிகாதான்!

முன்பு சமாதானத் தேவதையாகத் தன்னைக் காட்டிக் கொண்டு, போர்த்தேவதையாக பின்னர் உருக்கொண்டு, தமிழினத்தின் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துத் தன் சுயரூபத்தை ஜனாதிபதி சந்திரிகா வெளிக்கொணர்ந்து வந்தார். இப்போதோ சமாதானத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு அரசைக் கைப்பற்றிய பின்பு சமாதானத்திற்கு ஆதரவான போக்கைக் கொண்டிருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை அம்மையார் உருவாக்கிக் காட்டுகின்றார்.

அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க ஒரு சிங்கள பௌத்தப் பேரினவாதியாக இருந்த போதிலும், அவருடைய இலட்சியம் - ஒரே இலட்சியம் - அவருடைய அதிகார - அரசியல் எதிர்காலம்தான்! தன்னுடைய சொந்த அரசியல் நலனுக்காக, தன்னுடைய சொந்த அரசியல் எதிர்காலத்திற்காக - சந்திரிகா எதையும் சொல்வார், எதையும் செய்வார் என்பதைத் தான் இவை சுட்டிக் காட்டுகின்றன. ஒரு சிங்கள - பௌத்த பேரினவாதப் பெண்மணியின் சுயநல அரசியல் எதிர்காலத்தின் பொருட்டு அரங்கேறுகின்ற இந்தத் திடீர் நாடகங்கள் ஊடாக, சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்ற கேள்விக்குரிய பதிலை, உலகம் எதிர் பார்த்து நிற்கின்ற நிலை, வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

நாம் இப்போது மட்டுமல்ல, முன்னரும் பல தடவைகள் வலியுறுத்தி வந்த, தர்க்கித்து வந்த கருத்துக்களில் இதுவும் ஒன்றாகும். அது மட்டுமல்ல, இன்னுமொரு கருத்தையும் நாம் பல காலமாகத் தர்க்கித்தே வந்துள்ளோம். 'தான் மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாத காலம் வரும் வேளையில், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரதம மந்திரிப் பதவிக்கு மாற்றுவதற்கு முனைவார் என்றும், அதற்காக இலங்கையின் அரசியல் யாப்பை மாற்ற முனைவார் என்றும் தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு ஒன்றைக் காண்பதற்காகவே, அரசியல் யாப்பை மாற்ற இருக்கின்றேன் என்றும் சந்திரிகா காரணம் காட்டுவார்" என்றும் நாம் பல தடவைகள் தர்க்கித்தே வந்துள்ளோம்.

அதாவது தான் மூன்றாவது முறையாக, ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட முடியாத நிலையில், அரசியல் துறவறம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய நிலை சந்திரிகாவிற்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே, ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களை, பிரதம மந்திரியின் பதவிக்குரிய அதிகாரங்களாக, மாற்றம் செய்யும் பட்சத்தில்தான் சந்திரிகா எதிர்காலத்தில் பிரதம மந்திரியாக போட்டியிடவோ, ஆட்சியைக் கைப்பற்றவோ முடியும். இதனைச் செய்வதற்கு முதலில் இலங்கையின் அரசியல் யாப்பை மாற்ற வேண்டும். ஆனால் அரசியல் யாப்பை மாற்றுவதற்கு, இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதன் மூலம் முதல் அனுமதியைப் பெறவேண்டும்.

இதனை எவ்வாறு செய்ய முடியும்?

அரசியல் யாப்பின் பல முக்கியமான கருத்துக்களை மாற்றுவதற்கு வலுவான காரணம் ஒன்றைக் காட்ட வேண்டும். அது உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பலமான ஆதரவைப் பெறக்கூடிய காரணமாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட காரணமாக, எந்தக் காரணத்தைக் காட்டலாம்?

இருக்கவே இருக்கின்றது, தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினை! அதற்கு ஓர் இறுதியானதும், உறுதியானதுமான தீர்வைக் காண்பதற்காக, இலங்கையின் அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும் - என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து, சர்வகட்சி ஆதரவைத் தேட முயல்வது பயனைத் தரக்கூடும். அதற்கான அடித்தளத்தை இப்போதே போட வேண்டும். ஆனால் நேரமோ நெருங்கிக் கொண்டிருக்கின்றது! இதற்கு என்ன வழி?

இதற்கு ஒரே ஒரு வழிதான் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா எண்ணுகின்றார் போலும்.! சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் போது, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான பேச்சுக்களோடு, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பேச்சுக்களையும் சமகாலத்தில் நடத்த வேண்டும். அப்படி நடத்துவதாகச் சொல்லிக் கொண்டு அதனைக் காரணம் காட்டி, இலங்கையின் அரசியல் யாப்பை, தன்னுடைய அரசியல் எதிர்கால வளத்திற்கு ஏற்ற முறையில் மாற்றவேண்டும்! இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், வேறு ஏது சந்தர்ப்பம்?

ஆகையால்தான் சந்திரிகா இப்போது, சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான பேச்சுக்களையும், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பேச்சுக்களையும், சமகாலத்தில் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றார்.

இதனால், பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகாமல், தடைப்பட்டு நிற்கின்றன. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்குத் தடைக்கல்லாக ஜனாதிபதி சந்திரிகாவின் அதிகாரவெறி குறுக்கே நிற்கின்றது. ஜே.வி.பியினால் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து, பேச்சு வார்த்தைகளோ நடைபெறக்கூடாது' என்று விடாப்பிடியாக நிற்கின்றது.

ஆனால், தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ, 'சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும்போது, இடைக்கால நிர்வாக கட்டமைப்புக் குறித்தே முதலில் ஆராயப்பட வேண்டும்' என்ற நிலைப்பாட்டில் மிக உறுதியாக நிற்கின்றார்கள். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு, அரசு தடையாக நிற்கும் இந்த வேளையில், முக்கிய காரணியாக விளங்குகின்ற 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' குறித்து சில விடயங்களைச் சிந்தித்துத் தர்க்கிப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு, எந்த... எந்த... விடயங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்பதற்கு முன்பாக, இவை எழுதப்படுவதற்கு என்ன... என்ன... விடயங்கள் காரணமாக இருந்துள்ளன, என்பது குறித்து நாம் சிந்திப்பது அவசியமாகும்.

இரண்டு சகாப்த காலத்திற்கும் மேலாக, போரினால் உருவாகிய அவலத்திற்கு முகம்கொடுத்து, இன்னல் நிறைந்த வாழ்வை அனுபவித்து வருகின்ற, தமிழ் மக்களுடைய வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும். அவர்களுடைய சமூக - பொருளாதார வாழ்வியல் முன்னேற்றம் காணவேண்டும். வடக்கு - கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும். அது மட்டுமல்ல, அவை செயல்திறனுடன் விரைவாக நிறைவேற்றப்படவேண்டும். இந்த அவசிய-அத்தியாவசியப்பணிகள், தமிழ் மக்களுடைய அடிப்படை வாழ்வியல் உரிமையும் கூட! ஆகவே இவை நிறைவேற்றப்படுவதற்குரிய, உகந்த அதிகார சபைக்குரிய ஆலோசனைகளை உருவாக்க வேண்டும். இந்த அடிப்படையில் முறையாக உருவாக்கப்பட்டதுதான் இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனைத் திட்ட வரைவு.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தோன்ற வேண்டிய நிலைக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்களில் ஜனாதிபதி சந்திரிகா முக்கியமானவர் என்ற கருத்தையும் நாம் இங்கே வலியுறுத்த விரும்புகிறோம். அரச பயங்கரவாதப் போர்கள் காரணமாகவும், அரசு விதித்த உணவு - மருந்து - பொருளாதாரத் தடைகள் காரணமாகவும்தான், எம் மக்களின் இயல்பு வாழ்க்கை அவலம் நிறைந்த வாழ்வாக மாறியது. ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில்தான், தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் கடுமையான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, உயிரிழப்பையும், சொத்து இழப்பையும், பொருள் இழப்பையும் ஏற்படுத்தியது. ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் ஓர் இரவிலேயே அகதிகளாக இடம்பெயர்ந்த வரலாற்றுக் கொடுமையும், சந்திரிகாவின் அதிகாரத்தின் கீழேயே நடைபெற்றது. ஆகவே அவர் மூலமாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை மாற்றியமைக்க வேண்டியதார்மீக கடமையும், பொறுப்பும் சந்திரிகாவிற்கு இருக்க வேண்டும். ஆனால், இவற்றை இலட்சியம் செய்யாது தன்னுடைய சொந்த அரசியல் நலனில் மட்டுமே அக்கறை கொண்டுள்ள வராக சந்திரிகா செயல்படுகிறார்.

அறுதிப் பெரும்பான்மை அற்ற அரசுக்குத் தலைமை வகித்துக் கொண்டிருக்கின்ற சந்திரிகாவிற்கு தன்னுடைய ஆளும் கட்சிக் கூட்டணியை சேர்ந்த ஒருவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கக்கூடிய வல்லமைகூட இன்று இல்லை. இந்த இலட்சணத்தில் இடைக்காலத் தன்னாட்சி குறித்தும், தமிழ்த் தேசியப் பிரச்சினைக் குரிய இறுதித் தீர்வு குறித்தும் ஒரே நேரத்தில் பேசித் தீர்க்கப்போவதாக சந்திரிகா கூறி வருவதானது, வியப்பை மட்டுமல்ல, ஆத்திரத்தையும் உருவாக்குகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விடயத்தையும் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' என்பது அதன் பெயருக்கு ஏற்றாற்போல், இடைக்காலத்திற்கு உரியதே தவிர நிரந்தரமான அதிகாரம் உள்ள நிர்வாகக் கட்டமைப்பு அல்ல, என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தவிரவும் இந்த ஆலோசனை வரைவு, சமாதானத் தீர்வுக்கு உரிய ஆலோசனை வரைவு அல்ல, என்ற யதார்த்தத்தையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். தமிழ்த் தேசத்தின் தேசியப் பிரச்சினைக்குரிய நிரந்தரமான - நியாயமான - கௌரவமான சமாதானத் தீர்வினை - ஓர் இறுதித் தீர்வினை - அடைவதற்கும், அதனை அமுல்ப்படுத்துவதற்கும் நீண்ட காலமெடுக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் இன்னல் நிறைந்த வாழ்க்கை இன்னமும் இயல்பு நிலைக்குத் திரும்பாமல் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சரியாக சொல்லப் போனால், இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஆலோசனைகளை ஏற்று, மிக விரைவில் இந்த அதிகார சபையை முறையாக உருவாக்கி, அதனைச் செயற்பட வைப்பதன் மூலம்தான் இறுதித் தீர்வுக்குரிய அத்திவாரம் பலமாக போடப்படும் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை முறையாகத் தீர்க்கக்கூடிய எந்தத் தீர்வும், இலங்கையின் அரசியல் யாப்பிற்கு முரண்பட்டதாகவே இருக்கும் - என்ற யதார்த்தத்தை நாம் எல்லோரும் அறிவோம். இந்தத் தடையை தாண்டுகின்ற காலம் வரும்வரை, தமிழ் மக்களின் வாழ்க்கை தொடர்ந்தும் இன்னல் நிறைந்ததாகவே இருக்கக் கூடாது என்பதற்காகவும்தான், இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்குரிய ஆலோசனைத் திட்ட வரைவு உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட அதிகார சபைக்குரிய ஆலோசனைத் திட்டமும், இந்த அரசியல் யாப்புச் சிக்கலுக்குள் மாட்டித் தவிக்குமேயானால், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குரிய இறுதித்தீர்வு, பேச்சுவார்த்தைகள் ஊடே பெறப்படலாம் என்ற நம்பிக்கையும் விரைவில் பொய்த்து விடும்.

இன்று தமிழீழ மக்கள் பொதுத்தேர்தல் ஊடாக, ஏகமனதாக வழங்கிய இறையாணைகளில், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய, ஆணையும் ஒன்றாகும். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஆலோசனைகள், உடனடியாக பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, முறையான அதிகாரசபை உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழீழ மக்கள் தெளிவான தீர்க்கமான ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட, ஜனநாயக ரீதியாக, ஏகமனதாகக் கொடுக்கப்பட்ட ஆணையையும், சந்திரிகாவின் அரசு புறக்கணிக்குமேயானால். இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளினால், உருப்படியான பலன் எதுவும் வரப்போவதில்லை என்பதே உண்மையாகும்.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை இவ்வாறு இழுபட்டுக் கொண்டு போவதுதான், நிகழ்காலச் சம்பவங்களாக இருக்கப் போகின்றது - என்றால், இடைக்காலத்தையும், நிகழ்காலத்தையும் பற்றி யோசிப்பதை விட்டு, நிலையான எதிர் காலம் குறித்து தமிழீழம் முடிவொன்றை எடுக்கும் காலம் நெருங்கி வந்துவிடும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உணர்ந்திட வேண்டும்.

☆

அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க ஒரு சிங்கள பௌத்தப் பேரினவாதியாக இருந்தபோதிலும், அவருடைய இலட்சியம் - ஒரே இலட்சியம் - அவருடைய அதிகார - அரசியல் எதிர்காலம்தான்! தன்னுடைய சொந்த அரசியல் நலனுக்காக, தன்னுடைய சொந்த அரசியல் எதிர் காலத்திற்காக - சந்திரிகா எதையும் சொல்வார், எதையும் செய்வார் என்பதைத்தான் இவை சுட்டிக் காட்டுகின்றன. ஒரு சிங்கள - பௌத்த பேரினவாதப் பெண்மணியின் சுயநல அரசியல் எதிர்காலத்தின் பொருட்டு அரங்கேறுகின்ற இந்தத் திடீர் நாடகங்கள் ஊடாக, சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்ற கேள்விக்குரிய பதிலை, உலகம் எதிர்பார்த்து நிற்கின்ற நிலை, வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு, எந்த... எந்த... விடயங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்பதற்கு முன்பாக, இவை எழுதப்படுவதற்கு என்ன... என்ன... விடயங்கள் காரணமாக இருந்துள்ளன, என்பது குறித்து நாம் சிந்திப்பது அவசியமாகும்.

2004 இன் உலக அழகியாக அவுஸ்ரேலிய அழகி தெரிவு!

2004 ஆம் ஆண்டுக்கான மிஸ் யூனிவர்ஸ் உலக அழகிப் பட்டத்தை அவுஸ்ரேலிய அழகி ஜெனிபர் தட் டிச்சென்றார்.

ஒவ்வொரு ஆண்டும் 'மிஸ் யூனிவர்ஸ்' 'மிஸ் வேர்ல்ட்' பட்டங்களுக்கான உலக அழகிப்போட்டி நடத்தப் பட்டுவருகிறது. இந்த ஆண்டுக்கான மிஸ் யூனிவர்ஸ் உலக அழகிப் போட்டி ஈகுவடோர் நாட்டில் உள்ள குயிடோ நகரில் நேற்று அதிகாலை நடந்தது.

இதில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்துகொண்டனர்.

தென் அமெரிக்காவின் வடமேற்கில் அமைந்துள்ள இந்த குட்டி நாட்டின் பல நகரங்களில் தொடக்க சுற்றுப்போட்டிகள் கடந்த மாதம் 10 ஆந் திகதி முதல் நடந்தன.

அதில் இந்தியா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா, நோர்வே, ஈகுவடோர் உட்பட பல நாட்டு அழகிகள் அதிக புள்ளிகள் பெற்று முன்னிலை பெற்றனர்.

தொடக்க சுற்றுப்போட்டிகள் தவிர ஈகுவடோர் நாட்டின் முக்கிய நகரங்களில் 80 நாட்டு அழகிகள் அலங்கார கண்கவர் அணிவகுப்புகளை நடத்தினர். இதை 1 லட்சத்துக்கும் மேற்பட்ட ஈகுவடோர் மக்கள் கண்டுகளித்தனர்.

தொடக்க சுற்றுப்போட்டிகளில் இந்தியா, ஈகுவடோர், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, நோர்வே, ட்னிடாட் நாட்டு அழகிகள் முன்னிலை பெற்றனர்.

இவர்களில் உலக அழகிப் பட்டம் யாருக்கு என்பதைத் தீர்மானிக்க நேற்று இறுதிப்போட்டி நடந்தது.

இதைக் காண சுமார் 8 ஆயிரம்பேர் திரணடிருந்தனர். உலகம் முழுவதிலும் 180 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 கோடிபேர் தொலைக்காட்சியில் அழகிப் போட்டியை நேரில் கண்டுகளித்தனர். முதலில் 80 நாட்டு அழகிகளும் அணிவகுத்து வந்தனர். அதன் அடிப்படையில் 10 அழகிகள் அரையிறுதிக்கு தேர்வானார்கள்.

அந்த 10 நாட்டு அழகிகளில் இந்திய அழகி தனுஸ்ரீ தத்தாவும் ஒருவராக தேர்வானார். இதனால், இந்திய அழகி உலக அழகிப் பட்டத்தை வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

10 அழகிகளில் இருந்து 5 அழகிகள் மட்டும் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றனர். அதில் இந்திய அழகி தனுஸ்ரீ இடம்பெறவில்லை.

அவுஸ்ரேலியா, அமெரிக்கா, போர்டோரிகோ, பரகுவே, டிரினிடாட் ஆகிய ஐந்து நாட்டு அழகிகள் பட்டத்தை வெல்ல மோதினார்கள். அவர்களிடம் நடுவர்கள் பல்வேறு கேள்விகளை கேட்டனர்.

சிறப்பாக பதிலளித்த அவுஸ்ரேலிய நாட்டு அழகி ஜெனிபர் ஹாக்கின்ஸ் உலக அழகிப்பட்டத்தை வென்றார்.

ஜெனிபருக்கு உலக அழகிப்பட்டத்தையும், கிரீடத்தையும் கடந்த ஆண்டு மிஸ் யூனிவேர்ஸ் பட்டம் வென்ற டொமினிக் நாட்டு அழகி அமிலியா வேகா சூட்டினார்.

இரண்டாவது இடத்தை அமெரிக்க அழகி சந்திப் பின்னெசி பெற்றார். மூன்றாவது இடத்தை போர்ட்டோரிகோ அழகி ஆல்பாராயஸ், நாலாவது இடத்தை பராகுவே அழகி யானினாவும், ஐந்தாவது இடத்தை டிரினிடட் அழகி டானிலியும் பெற்றனர். அவர்களுக்கும் பட்டங்கள் சூட்டப்பட்டன.

ரபா அகதி முகாமிற்குள் மீளவும் இஸ்ரேல் இராணுவம் பிரவேசம்

காஸாப் பிரதேசத்திலுள்ள ரபா அகதிமுகாமிற்கு மீளவும் இஸ்ரேலியப்படையினர் ராங்கிகளுடனும், புல்டோசர்களுடனும் பிரவேசித்துள்ளனர்.

இஸ்ரேலியப் படையினர் ரபா அகதிமுகாம் பகுதிக்குள் பிரவேசிக்கும்போது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், இதன்போது யாராவது காயமடைந்தார்களா என்ற விபரம் தெளிவாகத் தெரியவில்லையென பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

எகிப்திலிருந்து காஸாப்பிரதேசத்திற்கான சுரங்கப்பாதை வழியாக தொடர்ந்தும் ஆயுதங்கள் கடத்தப்படுவதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தின் ரபா அகதிமுகாம் பிரவேசத்தின் போது, எதுவித தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றதாகத் தகவல் இல்லையென்கிறார், காஸாப் பகுதியிலுள்ள பி.பி.சி செய்தியாளர் அலன் ஜோன்ஸ்ரன்.

அத்துடன் 30 இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் புல்டோசர்கள் ரபா அகதிமுகாமில் 150 மீட்டர் தூரத்திற்குள் பிரவேசித்து நிற்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம், ரபா அகதி முகாமிலுள்ள ஐ.நாவின் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த பத்துவயதான மொகமட் ஹமாட் என்ற பலஸ்தீனச் சிறுவன் இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால், கழுத்துப் பகுதியில் படுகாயமடைந்துள்ளதாக ஐ.நா அமைப்பின் அகதிகளுக்கான அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, தாம் விசாரணை நடாத்தி வருவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இதனிடையே காஸாப்பிரதேசத்தில் இருந்து இஸ்ரேலியப் படையினரை வெளியேற்றுவது தொடர்பான தனது திட்டம் குறித்து பிரதமர் ஷரோன் தொடர்ந்தும் விவாதித்து வருகின்றார்.

இதன் தொடர்ச்சியாக- தனது திட்டத்துடன் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சில்வன் சலோமை பிரதமர் ஷரோன் எகிப்திற்கு அனுப்பியுள்ளார்.

ஈராக் இடைக்கால அரசின்

அதிகாரம் குறித்த முன்மொழிவினை அமெரிக்கா, பிரிட்டன் முன்வைப்பு!

ஈராக்கின் இடைக்கால அரசின் அதிகாரம் தொடர்பான முன்மொழிவினை பிரிட்டனும், அமெரிக்காவும் ஐ.நா பாதுகாப்புச் சபையிடம் கையளித்துள்ளன.

இந்த முன்மொழிவின்படி ஈராக்கிலுள்ள அமெரிக்கா தலைமையிலான படைகள் எப்போது வெளியேறும்?, ஈராக்கின் இடைக்கால அரசிறகான பாதுகாப்பை பொறுப்புக் கொடுப்பது எப்போது? போன்ற விபரங்களே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய இரு நாடுகளதும் இந்த முன்மொழிவினை சீனா, ரஷ்யா, மற்றும் பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் நிராகரித்துள்ளன.

இதேவேளை- ஐ.நாவின் அதிகாரங்கள் ஈராக்கில் அடுத்த வருடம் நடைபெறம் ஜனநாயக ரீதியிலான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசு அதிகாரங்கள் முழுவதையும் ஏற்றபின்னர் விலக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முன்மொழிவு தொடர்பாக ஐ.நா முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையினை நேற்று முன்தினம் நடாத்தியுள்ளது. ஆனாலும் ஐ.நா இது தொடர்பான முடிவினை எடுக்க மாட்டாது. ஏனெனில் இன்னமும் தனது அதிகாரிகளுடனும் ஈராக்கிய இடைக்கால அரசுடனும் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டியுள்ளது.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் செயற்பாடுகள் உடனடியாக எந்தவொரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாதென, அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும்- அமெரிக்க நிர்வாகம் சாத்தியமான வகையில் விரைவாக இது தொடர்பான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளுமென பி.பி.சியின் செய்தியாளர் ஜோன் லீனி தெரிவித்தார்.

இதேவேளை- புதிதாக நேற்று முன்தினம் பதவியேற்ற ஈராக்கின் இடைக்கால அரசின் வெளியுறவு அமைச்சர் கோஷியார் சபாரி நேற்று அமெரிக்காவிற்குச் சென்று, இன்று அமெரிக்க அதிகாரிகளுடன் சந்திப்பினை நடத்தப் போவதாகவும் திட்டமிட்டிருந்தார்.

அமெரிக்க பிரஜைகள் மீது சவூதிஅரேபியாவில் தாக்குதல்

சவூதி அரேபியாவின் தலைநகரான றியாட்டில் அமெரிக்க பிரஜைகளை இலக்குவைத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து, தகவல்கள் எதுவும் வெளியிடப்படாத போதும் - இந்தச் சம்பவம் தொடர்பாக சவூதி அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை.

அரேபியாவில் முஸ்லிம் அல்லாதவர்களை அகற்றும் நடவடிக்கையை அல்கெய்டா அமைப்பு ஆரம்பித்தது. அல் கோபார் நகரில் 22 வெளி நாட்டவர்களை படுகொலை செய்திருந்தது.

இதன்போதும், வேறொரு தாக்குதல் சம்பவத்திலும் இரு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதையடுத்து, இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஹெயிட்டியின் உதவிப் பணிகளை ஐ.நா.படையினர் பொறுப்பேற்றனர்

(ஹெயிட்டி)

ஹெயிட்டியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படையினர் மேற்கொண்டு வந்த உதவிப் பணிகளை ஐ.நா சமாதானப் படையினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பிறேசில் நாட்டுப் படையினரின் தலைமையில் சுமார் எண்ணாயிரம் படையினர் உதவிப் பணிகளை மேற்கொள்வதுடன் ஹெயிட்டிக்கு பாதுகாப்பையும் வழங்கவுள்ளனர்.

சுமார் 6700 படையினரும் 1622 பொலிஸாரும் ஹெயிட்டிக்கான ஐ.நா சமாதானப் படையில் உள்ளனர். இவர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளவுள்ளனர்.

ஹெயிட்டி சென்றுள்ள ஐ.நா சமாதானப்படையினர், உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக பெருமளவு ஜீப் மற்றும் லொறிகளை கடந்த சில நாட்களாக தருவித்துள்ளனர்.

இதேவேளை உதவிப் பணிகளை மேற்கொள்பவர்கள் தெரிவிக்கையில், இந்த மாதம் மேலும் மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுவதால் தொற்று நோய்களின் தாக்கம் மேலும் அதிகரிக்குமென அஞ்சப்படுகிறது.

அத்துடன்- பாவா, சென்மைக்கல், நன்கலிற்றி மற்றும் நனோச்சி போன்ற நான்கு கிராமங்களும் கடும் மழை காரணமாக அதிகம் பாதிப்படைந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்தது.

இந்த நான்கு கிராமங்களும் மண்சரிவு மற்றும் பாறைகளின் சரிவு போன்றவற்றால் பாதிப்படையக் கூடிய நிலையில் உள்ளன.

மேட்டுப்பகுதிகளில் தற்போது குடியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு- பிளாஸ்ரிக் கூரை விரிப்புக்களை வழங்கி, தற்காலிக கொட்டகைகளை அமைத்துக் கொடுத்துள்ளதாகவும் இரவு வேளைகளில் பாதுகாப்பினை கண்காணிக்க உள்ளூர் மக்களின் உதவிகளை நாடியுள்ளதாகவும் ஐ.சி.ஆர்.சி தெரிவித்தது.

சுமார் நூறு தொன் உணவு வகைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை விமானங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது- விமான உதவி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நேரடியான உதவிகள் எதுவும் செய்யவில்லை எனவும் இதற்கு வெள்ளப்பெருக்கு அதிகரித்திருப்பதே காரணமெனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கொங்கோவின் புக்காவு நகரில் மீண்டும் கடும் சண்டை மூண்டது!

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதி நகரான புக்காவுவில் மீண்டும் கடும் சண்டைகள் ஆரம்பித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புக்காவு நகரின் மத்திய பகுதியில் நேற்று அதிகாலை சிறிய ஆயுதங்கள் மற்றும் மோட்டார்களைக் கொண்டு தாக்குதல்கள் ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது.

கேனல் ஜீலிஸ் முரேபுசிலின் படைகள் தாம் புக்காவு நகரைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருப்பதாக அறிவித்திருந்த போதிலும் ஐ.நா.படைகள் அதனை மறுத்திருந்தன.

சமாதான தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் கேனல் முரேபுசியின் முன்னாள் தீவிரவாத படைகளைச் சேர்ந்தோரை இராணுவத்துக்குள் சேர்த்தபோது, மோதல்கள் ஏற்பட்டு, சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

கடந்த ஒரு வாரகாலமாக நீடிக்கும் சண்டைகளில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான துட்சி பன்ஜாமுலேன்கே இனக் குழுவினர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் அருகிலுள்ள ருவாண்டா பகுதிக்குள் சென்றுள்ளனர்.

இது ஒரு இன வன்முறை அல்ல என்றும், இராணுவத்திற்குள் நீடிக்கும் ஒழுக்கமற்ற நிலையால் ஏற்பட்ட மோதல்களே என்றும், கொங்கோ வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

புக்காவு நகரில் கட்டுப்பாட்டை நிலைநாட்டவே கேனல் முரேபுசியின் படைகள் தாக்குதல் நடத்துவதாக அந்தப் பகுதிக்கு பொறுப்பான இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் முசேமபே தெரிவித்தார்.

இந்த சண்டைகளையடுத்து, கொங்கோ தேசிய இராணுவத்தில் வகித்த பதவிகளிலிருந்து முரேபுசி நீக்கப்பட்டுள்ளார்.

கேனல் முரேபுசி தலைமையில் சுமார் ஆயிரம் போராளிகள் புக்காவு நகரைநோக்கி முன்னேறுவதாக கூறப்படுகின்றது.

நமது ஈழநாடு
The Namathu Ezhanadu
The Leading Daily of Tamils' Homeland

நடேசன் படுகொலைக்கு சர்வதேச ரீதியில் கண்டனம்

மட்டக்களப்பில் வைத்து கடந்த திங்கட்கிழமை மூத்த பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் சுட்டுக் கொல்லப்பட்டமையை எல்லைகளைக் கடந்த பத்திரிகையாளர்கள் அமைப்புக் கண்டித்துள்ளது.

பாரிஸை மையமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த சர்வதேச ஊடக கண்காணிப்பு நிறுவனம் ஊடகத் துறைக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ள புதிய வன்முறைவடிவத் தைக் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பும் முன்வரவேண்டும்.

அது மட்டுமல்லாது இக்கொலை தொடர்பாக விசாரணை நடத்தி அந்த விசாரணையின் பலன்கள் முன்னேற் றங்கள் தொடர்பாக உடனுக்குடன் அறிவிக்குமாறும் கோரிக்கை விடுத் துள்ளது.

இதேவேளை ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் கொலை தொடர்பாக ஆராயவென விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப் பட்டிருப்பதாகவும் மட்டக்களப்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித் தன.

ஊடகவியலாளர் நடேசன் கொலை; தேசிய சமாதானப்பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் ஐ.நடேசன் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப் பில் சுட்டுக்கொல்லப்பட்டமையை தேசிய சமாதானப் பேரவை கடுமை யாகக் கண்டித்துள்ளதுடன் இந்தப் படுகொலை சமாதான முன்னெடுப் புக்கான மிகப்பெரும் அச்சுறுத்தல் எனவும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய சமாதா னப் பேரவை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது -

அண்மைக்காலத்தில் இவ்வா றான படுகொலைகள் திடீரென அதி கரித்திருப்பதானது தற்போது நடை முறையில் உள்ள யுத்தநிறுத்தத் திற்கும் சமாதான முன்னெடுப்பிற்கும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்தக் கொலைகள் குறித்து விடு தலைப் புலிகள்- கருணா குழுவை யும் அரச படையினரையும் குற்றஞ் சாட்டுகிறார்கள். படையினரின் புல னாய்வு உறுப்பினர்களும், கருணா குழுவினரைச் சேர்ந்தவர்களும் கொல்லப்படும்போது விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படு கிறது.

எனவே இந்த இரண்டு பிரதான அமைப்புக்களும் தமது நடவடிக் கைகளைக் கைவிடாவிட்டால் மனித உரிமைகள் மற்றும் யுத்தநிறுத்தத் தைப் பாதுகாப்பதென்பது இயலாத விடயமாகும்.

வடக்கு - கிழக்கு பகுதியில் உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளுடனும், அரசாங் கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்து மாறு தாம் நோர்வேயைக் கோரி யுள்ளதாகவும் தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

சந்திரசேகரன் - தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் சந்திப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திர சேகரன் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள சமா தானச் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சமகால நிகழ்வு கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பூர் கடற்பரப்பில் கடற்புலிகள் பயிற்சியாம் படைத்தரப்பு கூறுகிறது

(திருகோணமலை)

திருகோணமலைக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் பயிற்சியில் ஈடுபட்டுவருவதாக படைத்தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை திருகோணமலை சம்பூர் வடக்கு கடற்பகுதிக்கு கடற் படையோடு போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழு சென்றபோது துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகவும் படைத்தரப்புத் தெரி வித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திற்கு போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழு தெரியப்படுத்திய தாகவும் படைத்தரப்பு மேலும் தெரி வித்தது. (01)

தமிழர்...

ஸ்தம்பிதம் அடைந்ததுடன், கடை கள் பூட்டப்பட்டு முக்கிய கட்டடங் களில் கறுப்புக்கொடிகள் கட்டப் பட்டு சோக கீதம் இசைக்கப்பட்டது.

இதனால் நேற்று பட்டிருப்பு பாலத்துடனான போக்குவரத்து மட் டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன்...

மூன்று தினங்களுக்கு முன்னர் இந்தியத் தரப்பின் இந்தத் திட்ட வரைபு தமக்குக் கிடைத்திருப்ப தாக பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் சிறில் ஹேரத் நேற்றுத் தெரி வித்தார்.

இது தொடர்பான சட்டப் பிரச் சினைகள் பற்றி ஆராய அந்த வரைபை சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டிருப்ப தாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவப்பயிற்சி, புலனாய்வுத் தக வல் பரிமாற்றங்கள் உட்பட பல விடயங்கள் இந்த உடன்படிக்கை யில உள்ளடக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

ஊடகத்துறை....

சுதந்திர முன்னணியில் உள்ள முக் கிய கட்சியான ஜே.வி.பி இவரை ஊடகத்துறை அமைச்சராக நியமிப் பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

இதனால் தற்போது சிவில் விமா னப் போக்குவரத்து அமைச்சரான மங்கள சமரவீர இப்பதவிக்கு நிய மிக்கப்பட இருப்பதாக தெரியவரு கிறது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு ஆறுமுகன் தொண்டமா னுக்கு வழங்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கத்துடன் இணைவது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இன்றிரவு பேச்சுக் களை நடத்தவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

நடேசன் படுகொலையை கண்டித்து அம்பாறையில் ஆர்ப்பாட்டப் பேரணி

(அம்பாறை)

கிழக்கிலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்து நேற்று அம்பாறை நகரில் ஊடகவியலாளர்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவாழும் அம் பாறை நகரில் தமிழ்மகன் ஒருவருக்கு நிகழ்ந்த அனர்த் தத்தைக் கண்டித்து நடந்த முதலாவது கண்டன ஆர்ப் பாட்டம் இதுவேயாகும்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத் தில் பெருந்தொகையான சிங்கள, முஸ்லிம், தமிழ் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

மேற்படி ஒன்றியத்தின் தலைவர் வசந்த சந்திரபால தலைமையில், - அம்பாறை நகரின் மத்தியில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது, தமிழிலும், சிங்களத் திலும் ஊடகவியலாளர்கள் அமரர் நடேசனின் கொலையைக் கண்டித்து 3 பெரும் கோஷங்களை எழுப்பினர்.

நேற்று அம்பாறை நகருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வருகைதந்து பௌத்த நிலையமொன்றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டிருந்த அதேவேளை, அம்பாறை நகரின் மத்தியில் ஊடக வியலாளர்களின் இந்த ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

நேற்று அம்பாறை நகரம் பௌத்த கொடிகளால், அலங்கரிக்கப்பட்டிருந்த நிலையில் ஊடகவியலாளர்க ளின் கண்டனக் கோஷங்கள் அரைமணிநேரம் ஓங்கி

ஒலித்துக்கொண்டிருந்தன.

"அன்று நிமலராஜன், இன்று நடேசன் - நாளை யாரோ?...", "அரசே ! நடேசனைக் கொன்றவர்களைக் கண்டுபிடி" ஆயுதக் கும்பல்களே ஊடகத் துறையினர் மீது கை வையாதே" - "உண்மையை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்க ளுக்கு தண்டனை மரணமா?" - சுதந்திர ஊடகவியலாளர்களைப் பாதுகாப்போம்" என்பன போன்ற வாசகங்களை தமிழிலும், சிங்களத் திலும் கொண்ட சுலோக அட்டைகளை இந்த ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் ஏந்தி யிருந்தனர். (07)

இயல்பு நிலையை உருவாக்குவது...

அண்மைக்காலமாக மட்டக்க ளப்பில் இடம்பெற்றுவரும் படு கொலைச் சம்பவங்களுடன் படையி னர் சம்பந்தப்பட்டு இருப்பதனையும் கருணா குழுவினருடன் படையினர் நெருங்கிச் செயற்படுகின்றனர் என் பதையும் இந்தச் சந்திப்பின் போது கேணல் ரமேஸ் சுட்டிக்காட்டினார்.

ஆனால், தான் புதிதாகப் பதவி யேற்ற சூழலில் இனிவரும் நாட்க ளில் அசம்பாவிதங்கள் எதுவும் நிக ழாவண்ணம் பார்த்துக்கொள்வது தமது பொறுப்பு என மேஜர் ஜென ரல் சாந்த கொட்டேகொட உறுதி வழங்கினார்.

அத்துடன் இந்தச் சந்திப்பின் போது குற்றவாளிகளை இனங்காண் பதற்கு இரண்டு தரப்பினரும் ஒன்றி ணைந்து நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும் இரு தரப்பினரும் உடன்பட்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் ஆட் கொலைகள் தொடர்பாக ஆராய வென தமழீழ விடுதலைப் புலிக ளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான விசேட கூட்டம் ஒன்று இன்று மட்டக்களப்பில் இடம்பெற வுள்ளதாக கேணல் ரமேஸ் தெரி வித்தார்.

இந்தச் சந்திப்பு 23 ஆவது படைப்பிரிவின் மூன்றாவது பிரிவு அலுவலகத்தில் இன்றுகாலை இடம் பெறும். இந்தச் சந்திப்பில் தமிழீழ விடு தலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் இ. சேனாதிராசா உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலக மண்ட பத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பி லேயே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாட லுக்கு போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தலைமை வகித்தார்.

ஊடகவியலாளர் நடேசனின்...

பூதவுடலுக்கு மலர் மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தியதுடன், அவரது குடும்பத்தினருக்கு ஆறுத லும் தெரிவித்தார்.

அத்துடன் - அங்கு விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்பாளர்க ளும், போராளிகளும் வணக்கம் செலுத்தினர்.

அதன் பின் அரசியற்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பிற்காக நேற்று கிளிநொச்சி வந்த மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன், நாட்டுப்பற்றாளர் நடே சனின் பூதவுடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதன் பின்னர், காலை 10.00 மணியளவில் பூதவுடல் கிளிநொச்சி யிலுள்ள பண்பாட்டு மண்டபத்தில் மக்கள் வணக்கத்துக்காக வைக்கப் பட்டது.

புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் தலைமையில் நடந்த நினைவஞ்சலி நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் தி.இராசநாயகம் ஏற்றி வைத்தார். நினைவுச் சுடர்களை நாட்டுப்பற்றாளர் நடேசனின் சகோ தரரும் அவரது துணைவியாரும் ஏற்றி வைத்தனர்.

இதன் பின்னர் பூதவுடலுக்கான மலர்மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் நடந்த நினைவஞ்சலிக் கூட் டத்தில் விடுதலைப்புலிகளின் முக் கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், ஈழநாதம் பத்திரிகை ஆசிரியர் பொ. ஜெயராஜ், அரசாங்க அதிபர் தி.இரா சநாயகம், ஊடக சங்கத் தலைவர் துரைரட்ணம், கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றி யத் தலைவர் பசுபதிப்பிள்ளை, மற் றும் கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ஆகியோர் நினை வுரையாற்றினர்.

இதன் பின்னர் - மக்களால் பூத வுடலுக்கான மலர் வணக்கம் இடம் பெற்றதைத் தொடர்ந்து பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட் டது,

யாழ்ப்பாணத்தின் - முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து நிகழ் வின் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் இளம்பிறையன் நாட்டுப்பற்றாளர் நடேசனின் பூதவுடலை அரசியற் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடமிருந்து கையேற்றார். தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி பூதவுடலுக்கு மலர் மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினார்.

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களான சிவநேசன், ரவிராஜ், சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பர நாதன், ஈழவேந்தன், கஜேந்திரன் ஆகியோருடன் பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள், தேசிய எழுச் சிப் பேரவை உறுப்பினர்கள், ஊட கவியலாளர்கள், மாணவர்கள், பொது மக்களும் சோதனைச் சாவடி வீதியூ டான ஊர்வலத்தில் கலந்துகொண் டனர்.

தொடர்ந்து பூதவுடல் கொடி காமம் பேரூந்து நிலையத்தில் வைக் கப்பட்டு நினைவஞ்சலிக் கூட்டம், நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுத் தலை வர் இளம்பிறையின் தலைமையில் நடைபெற்றது.

ஈகச்சுடரினை கொடிகாமம் வணி கர் மன்றத் தலைவர் சின்னத்தம்பி ஏற்றிவைக்க மலர்மாலையை கொடி காமம் திருநாவுக்கரசு மகாவித்தி யாலய அதிபர் கந்தையா அணிவித் தார். நினைவுரைகளை நாடாளு மன்ற உறுப்பினர் சிவநேசன் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன் ஆகியோர் நிகழ்த்தினர். இதன்பின் பூதவுடல் சாவகச்சேரி நவீன சந்தை முன் றலில் வைக்கப்பட்டு நினைவஞ் சலிக் கூட்டம் இடம்பெற்றது. இங்கு நினைவுரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், சாவகச்சேரி நிபேக் கல்லூரி உப அதிபர் அருந்தவபாலன் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகி யோர் நிகழ்த்தினர்.

இதன் பின் பூதவுடல் கைதடிச் சந்தியில் வைக்கப்பட்டு நினைவஞ் சலிக் கூட்டம் நடைபெற்றது. பின் னர் பூதவுடல் அரியாலை சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டு நினை வஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. சனசமூக நிலைய உறுப்பினர் கணநாதன் தலைமையில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் யாழ்.பல் கலைக்கழக துணைவேந்தர் பேரா சிரியர் மோகனதாஸ், மட்டக்களப் பில் இருந்து வந்த அல் - ஹிய்யா முஸ்லிம் மகாவித்தியாலய அதிபர் அஅலாவுதீன் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் பழனிவேல்பிள்ளை ஆகியோர் நினைவுரைகளை ஆற் றினர்.

இதன்பின் திருநெல்வேலிக்கு எடுத்துவரப்பட்ட பூதவுடல் அங்கு வைக்கப்பட்டு அஞ்சலி உரை நிகழ்த் தப்பட்டது. இதன்பின் பூதவுடல் பலாலி வீதி வழியாக நெல்லியடி யில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று காலை நெல்லியடி மத் திய மகா வித்தியாலயத்தில் நடை பெறும் நினைவஞ்சலிக் கூட்டத்தை தொடர்ந்து வதிரியிலுள்ள ஆலங் கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் தீயுடன் சங்கமமாகும். (லெ.தீ)

விற்பனை மேம்பாட்டாளர்கள் தேவை

நமது ஈழநாடு பத்திரிகையின், விற்பனை மேம்பாட்டு பகு திக்கு ஆர்வமும், சுறுசுறுப்பும் உடையோரிடம் இருந்து வின் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நீங்கள் ஆர்வமுடையவராயின் தங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 2004.06.10 ஆம் திகதிக்கு முன் னர் காரியாலயத்திற்கு வருகைதரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.